# கோபுரம்


தகவல் இதழ் மார்கழி - 1998




நாவலப்பிட்டி ஸ்ரீ முத்து மாரியம்மன் தேவஸ்தானம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

# அருள்நெறி விழா





1. இந்தியா இராஜ்கோட் இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜிதாத்மானந்தாஜி மஹராஜ் இந்து சமய நூல் எழுத்தாளரான மானியூர் சி. குமாரசுவாமி அவர்களுக்கு பரிசு வழங்குகின்றார். ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா, பணிப்பாளர் எஸ். தில்லைநடராஜா ஆகியோரும் உடன் உள்ளனர்.

2. இந்து சமயப் போட்டியிற் பரிசு பெற்ற மாணவியொருவருக்கு கொழும்பு பொன்னம்பலவானேஸ்வரர் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் சான்றிதழ் வழங்குகின்றார்.

## உள்ளே... !


- திணைக்களச் செய்திகள்
- புண்ணியம் புரிவார்க்கு பூவுண்டு நீருண்டு
- ஆசாரக்கோவையும் இளையோர்க்கான அறிவுரையும்
- நீதிமாலா
- தொண்டும் அன்பும்
- சமயம் என்னும் வாழ்க்கை நெறி
- அங்கும் இங்கும்
- சைவாலயங்களும் தேவாரங்களும்
- சந்தேகமும் தெளிவும்
- ஆலயங்களில் நித்திய நைமித்திகக் கிரியைகள்
- விநாயகர் தத்துவம்
- தலையும் வாலும்
- சொல் சுத்தம்
- கோபப்படலாமா?
- இறை தத்துவம்



கோபுரம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

மலர் - 9 இதழ் - 3

1998

வெகுதானிய வருடம் - மார்கழி மாதம்


கோபுரம் இதழ் பற்றிய உங்கள் எண்ணங்களை கீழ்வரும் முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.


பணிப்பாளர்,

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,

98, வோட் பிளேஸ்,

கொழும்பு - 7.

# திணைக்களச் செய்திகள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்த நடத்திய அருள்நெறி விழா ஆகஸ்ட் மாதம், 22ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

காலையில் கருத்தரங்கு, மாலையில் கலைநிகழ்ச்சிகள், விருதுவழங்கல் என நடைபெற்ற இவ்விழாவிற்கு திணைக்களத்தின் அழைப்பை ஏற்று இந்தியா, குஜராத் மாநிலம் ராஜ்கோட் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜிதாத்மானந்தா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ஆர். கைலாசநாதன் அவர்கள் கலந்துகொண்டார்.

பணிப்பாளர் திரு. எஸ். தில்லை நடராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழா

## அருள்நெறி விழா

மங்கள விளக்கேற்றலுடனும், இராமகிருஷ்ண மிஷன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பஞ்சபுராணம், அறநெறிக்கீதம் என்பவற்றுடனும் ஆரம்பமாகியது.

பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கொழும்பு பொன்னம்பலவாணேசுவர ஆலய பிரதம சிவாச்சாரியார், சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள், தமது ஆசியுரையில், அருள்நெறிவிழா சிறப்புறவும் திணைக்களப் பணிகள் வளர்ச்சியுறவும் வாழ்த்தினார்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா அவர்களின் அருளுரையைத் தொடர்ந்து ஸ்ரீமத்சுவாமி ஜிதாத்மானந்தா, திருமதி ஆர். சைலாசநாதன் ஆகியோரின் உரைகள் இடம் பெற்றன.

தொடர்ந்து, ஆலய அறங்காவலர்கள், இந்துசமய நிர்வாகிகளுக்கென, "இன்றைய வாழ்வில் இந்துசமயம்" எனும் பொருளில் கருத்தரங்கு நடைபெற்று.

பணிப்பாளர் திரு. எஸ். தில்லை நடராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், கொழும்பு சின்மயா மிஷன் தலைவர் திரு தெ. ஈஸ்வரன், அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் திரு.கந்தையா நீலகண்டன், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் இணைப்புச் செயலாளர் திருமதி சிவானந்தினி துரைசுவாமி ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

தொடர்ந்து கலந்து கொண்ட பிரதிநிதிகளின் கருத்துரைகளும் இடம்பெற்றன.

அடுத்து 1996ம் ஆண்டு நடைபெற்ற இந்துசமயப் போட்டிகளிற் பரிசுபெற்ற கொழும்பு மாவட்ட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.


திணைக்கள தகவல் உத்தியோகத்தர் திரு. ம. சண்முகநாதன் அவர்களின் நன்றியுரையுடன் காலை நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

மாலை நிகழ்வுகள் கொட்டாஞ்சேனை ஸ்ரீவரதராஜ விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பஞ்சபுராண ஓதலுடன் ஆரம்பமாகின. உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்துசமய நூல்களை எழுதிய எழுத்தாளர்களுக்கு ஸ்ரீமத் சுவாமி ஜிதாத்மானந்தா, ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா ஆகியோர் பணப்பரிசு, சான்றிதழ் என்பன வழங்கி கௌரவித்தனர்.

கலைநிகழ்ச்சிகளில், வடகொழும்பு இந்து பரிபாலன சபை அறநெறிப்பாடசாலை மாணவர்களின் 'தடுத்தாட்கொண்டமை' நாடகம், கொழும்பு சைவ முன்னேற்றச்சங்க அறநெறிப்பாடசாலை மாணவர்களின் "ஆலால சுந்தரரின் சமயவாழ்வு" வில்லுப்பாட்டு, விவேகானந்த சபை அறநெறிப்பாடசாலை மாணவர்களின் "பிட்டுக்கு மண்சுமந்த பெருமான்" நாடகம், இராமகிருஷ்ணமிஷன் அறநெறிப்பாடசாலை மாணவியரின் நடனம், வரதராஜ விநாயகர் ஆலய மாணவர்களின் "சேக்கிழார் கண்ட செம்பொருள் எனும் வில்லுப்பாட்டு" கொழும்பு மயூராபதி அம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவியரின் நடனம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கலாசார அலுவலர் திருமதி நிர்மலா கருணானந்தராஜா அவர்களின் நன்றியுரையுடனும், வடகொழும்பு இந்துபரிபாலன சங்க மாணவர்களின் பஞ்சபுராணத்துடனும் விழா நிறைவுபெற்றது.



## அருள்நெறி விழாக் காட்சிகள்




ஆலய நிர்வாகிகளுக்கான கருத்தரங்கில் திரு. கே. நீலகண்டன் (பொதுச் செயலாளர், இந்து மாமன்றம்) திரு. தெ. ஈஸ்வரன் (தலைவர், சின்மயா மிஷன்) திருமதி. சிவானந்தினி துரைசுவாமி (இணைப்புச் செயலாளர்-கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு) ஆகியோர் கருத்துரைகள் வழங்குகின்றனர். கூட்டத்தினரில் தபாற் தந்தி, தொலைத்தொடர்புகள் அமைச்சின் செயலாளர் திரு. கே. லோகேஸ்வரன், திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா ஆகியோர் உட்பட பிரமுகர்களைப் படத்திற் காணலாம்.





## அருள்நெறி விழாக் காட்சிகள்



1. ஸ்ரீமத் சுவாமி ஜிதாத்மானந்தா அவர்களின் ஆங்கில உரையை ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா மொழிபெயர்க்கிறார்.

2. இந்து சமயப் போட்டியில் பரிசு பெற்ற கொழும்பு மாவட்ட மாணவர் ஒருவருக்கு கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன் பரிசு வழங்குகின்றார். திரு. தில்லைநடராஜா அவர்களும் உடன் உள்ளார்.

3. கொட்டாஞ்சேனை வரதராஜ விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவிகளின் வில்லுப்பாட்டு.

# இந்துசமய நூல் எழுத்தாளர்க்கு பரிசளிப்பு

1997ம் ஆண்டு சிறந்த இந்துசமய நூல்களை எழுதி வெளியிட்ட இந்துசமய நூல் எழுத்தாளர்கள் பத்துப்பேர், ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்பத்தில் நடைபெற்ற அருள்நெறிவிழாவின்போது பொற்கிழி, சான்றிதழ் என்பன வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பணிப்பாளர், எஸ். தில்லை நடராஜா, கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா ஆகியோரின் முன்னிலையில், இந்தியா குஜராத் மாநிலம் ராஜ்கோட் இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜிதாத்மானந்தாஜி மஹராஜ் அவர்கள் பணப்பரிசு, சான்றிதழ் என்பவற்றை வழங்கினார்.

| | கௌரவிக்கப்பட்டோர் | நூலின் பெயர் |
|---|---|---|
| 1. | சித்தாந்தச் சுடரொளி சைவநன்மனி நா. செல்லப்பா | * திருவள்ளுவரும் திருமூலரும் சந்திக்கும் சிறப்பு<br>* மறைஞானம் நல்கும் சிவஞானபோதம் |
| 2. | திருமதி கலைவாணி ராமநாதன் சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரீகத்துறை, யாழ். பல்கலைக்கழகம். | * சைவசித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள் |
| 3. | சைவநன்மணி இரா. மயில்வாகனம் | * தேவி திருமுகம் |
| 4. | சைவநன்மணி ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி அம்மையார் | * சிறுவர் ஞானத்தமிழ் நடனம் |
| 5. | சின்னத்துரை குமாரசாமி ஸ்ரீமதி குமாரசாமி | * தேவாரம் தந்த ராஜராஜன் |
| 6. | குலசேகரம்பிள்ளை நாகேந்திரன் | * நாவலர் வினாவிடைத் தொகுப்பு |
| 7. | திரு. பெ. வடிவேலன் | * மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும் |
| 8. | அருட்கவியரசு சீ. விநாசித்தம்பிப்புலவர் | * யாழ்/நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயண பிள்ளைத்தமிழ்<br>* கேதார கௌரிவிரதம்<br>* நாராயணர் கவசம்<br>* மனோன்மணி கவசம்<br>* சித்திரபுத்திரநாயனார் புராணம்<br>* ஸ்ரீ ஆஞ்சநேயசுவாமி கும்பாபிஷேகமலர்<br>* ஸ்ரீ நாராயணன் திருவந்தாதி<br>* ஸ்ரீ லலிதாம்பிகை பேராயிரம் தொகுத்த பாராயண தோத்திரம்<br>* ஸ்ரீ நாராயண பெருமாள் 108 திருத்தலத் தோத்திரங்கள்<br>* தமிழ் மந்திர அர்ச்சனை மந்திரங்கள் |
| 9. | வித்துவான் பொன். கந்தசாமி | * கந்தபுராணம் - யுத்தகாண்டம்<br>* மாதகல் முருகமூர்த்தி பிள்ளைத்தமிழ்<br>* கோயிலமைப்பும் கிரியையும் வழிபடுமுறையும்<br>* நுனாசையந்தாதி<br>* பஞ்சமுகப்பிள்ளையார் வரலாறும் தோத்திரப்பாடலும் |
| 10. | சோ. பரமசாமி | * வீரசைவமரபியல் |

அன்றைய தினம் நேரில் கலந்துகொள்ளாத யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருள்கவியரசு, சீ. விநாசித்தம்பி, திருமதி கலைவாணி இராமநாதன், வித்துவான் பொன் கந்தசாமி ஆகியோருக்கு செப்டெம்பர் மாதம் 7 ம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தின்போது கௌரவம் வழங்கப்பட்டது. யாழ். மாவட்ட அரச அதிபர் திரு கே. சண்முகநாதன் அவர்கள் நிகழ்ச்சியிற் கலந்து சிறப்பித்தார்.

## இந்துசமயப் பேருரை

திணைக்களம் நடத்தும் இந்துசமயப் பேருரைத் தொடரின் 93வது உரை ஜூலை மாதம் 11ம் திகதி மாலை 5 மணிக்கு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது.

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி இராஜலட்சுமி கைலாசநாதன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித்தலைவரும் பேராதனைப்பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் "கலாசார முக்கோணம்-அநுராதபுரம் ஜேத்தவனாராம தலத்தின் இந்துசமய வெண்கலப் படிமங்கள்" எனும் பொருளில் உரை நிகழ்த்தினார். உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

---

## இராமாயணம் கூறும் இந்துமத அறக்கருத்துக்கள்

திணைக்களம் நடத்தும் இந்துசமயப் பேருரைத் தொடரின் 97வது உரை மாதம் 8ம் திகதி வியாழக்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கைக் கம்பன் கழகத் தலைவர் கம்பவாரிதி திரு இ. ஜெயராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினருமான செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்கள் "இராமாயணம் கூறும் இந்துமத அறக்கருத்துக்கள்" எனும் பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார்.

பணிப்பாளர் திரு. எஸ். தில்லை நடராஜா அவர்களின் அறிமுகவுரையுடன் ஆரம்பமான இந்நிகழ்ச்சி உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிறைவுபெற்றது.

---

## கர்நாடக சங்கீத இசைக் கச்சேரி

திணைக்களத்தின் ஏற்பாட்டில் கர்நாடக சங்கீத இசைக்கச்சேரி நிகழ்ச்சியொன்று ஜூன் மாதம் 21ம் திகதி மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், செல்வி மீரா அம்பிகாபதி 'வீணாமிர்தம்' நிகழ்ச்சியையும், இசைக்கலைமணி, சங்கீத மிருதங்க கலாவித்தகர் திரு. வர்ண இராமேஸ்வரன் கானாமிர்தம் நிகழ்ச்சியையும் வழங்கினர்.

வயலின் வி. விநாயகமூர்த்தி, மிருதங்கம் கலாபூஷணம் ஏ. சந்தானகிருஷ்ணன் கஞ்சிரா . ப. பிரம்மநாயகம், தம்புரா கே. கோவிந்தராஜா ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாகக் கலந்து கொண்டனர். உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

## நூல்கண்காட்சியும் விற்பனையும்

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் நூல்கண்காட்சியும், விற்பனையும் ஜுலை 20 முதல் 24ம் திகதி வரை கொழும்பு 7, கலாபவனத்தில் இடம்பெற்றன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததோடு திணைக்கள வெளியீடுகள் 20 சதவீத விலைக் கழிவுடன் விற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## திருவுந்தியார் மீட்பியல்

திணைக்களம் நடத்தும் சொற்பொழிவுத் தொடரின் 95 வது உரை ஜுலை மாதம் 25ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் அநுசரணையோடு நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் திரு. செ. குணரெட்னம் தலைமை வகித்தார்.

பேராசிரியர் அருட்திரு. நீ. மரியசேவியர் அவர்கள் "திருவுந்தியார் மீட்பியல்" எனும் பொருளில் சைவசித்தாந்தச் சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

அன்றைய தினம் வெளியிடப்பட்ட சைவசித்தாந்த சஞ்சிகைக்கான அறிமுகவுரையை பணிப்பாளர் திரு எஸ். தில்லைநடராஜா வழங்கினார். உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

---

## இலக்கியச் சொற்பொழிவு

திணைக்களம் நடத்தும் இலக்கியச் சொற்பொழிவுத் தொடரின் 15வது உரை ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி மாலை வெள்ளத்தை இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

துறைமுக, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. அ. ஜெயரட்னம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், முன்னாள் இலங்கை நிர்வாக சேவை அலுவலரும், பிரபல எழுத்தாளருமான செ. யோகநாதன், "தமிழ் கலை, இலக்கியவளர்ச்சியில் சிகரங்களைத் தொட்டவர்" எனும் பொருளில் உரை நிகழ்த்தினார்.


உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

## "அறமே வெல்லும்"

திணைக்களம், வி.ரி.வி. பவுண்டேசனுடன் இணைந்து நடத்திய இந்துசமயப் பேருரை நிகழ்ச்சியொன்று ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு, வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தாஜி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழகத்தின் பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளர் சொல்வேந்தர் திரு. சுகி சிவம் அவர்கள் "*அறமே வெல்லும்*" எனும் பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார்.

உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது. திரு. சுகி சிவம், கம்பராமாயணம், அபிராமி அந்தாதி, பெரியபுராணம், மகாபாரதம், கந்தபுராணம், ஞானியர் வரலாறுகள் போன்றவிடயங்களில் சிறப்பாக சொற்பொழிவாற்றும் ல்லமை மிக்கவர். பல நாடுகளுக்கும் விஜயம் செய்து, பல விருதுகளையும் பெற்றவர். புகழ்பெற்ற தமிழக எழுத்தாளர் சுகி. சுப்பிரமணியத்தின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



தமிழகத்தின் பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளர், திரு. சுகிசிவம், சொற்பொழிவு நிகழ்த்துகின்றார். தேசபந்து வி.ரி.வி. தெய்வநாயகம் பிள்ளை, புரவலர் கே.கே. சுப்பிரமணியம், புலவர் திருநாவுக்கரசு ஆகியோர் உட்பட கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரும் படத்திற் காணப்படுகின்றனர்.

## இலக்கிய விமர்சனத்தில் கட்டவிழ்ப்பு

திணைக்களம் நடாத்தும் இலக்கியச் சொற்பொழிவுத் தொடரின் 17வது உரை ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி சனிக்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலக ஊடகப் பிரிவின் தமிழ் நிகழ்ச்சிகள் ஒருங்கிணைப்பாளர் திரு. வி.ஏ. திருஞானசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா அவர்கள் "இலக்கிய விமர்சனத்திற் கட்டவிழ்ப்பு" எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

# இந்து சமயச் சொற்பொழிவு





திருமறைக்கலா மன்றத் தலைவர் பேராசிரியர் மரியசேவியர் அடிகள் சொற்பொழிவு நிகழ்த்துகின்றார். இலக்கியச் செம்மல் சே. குணரத்தினம் பணிப்பாளர் எஸ். தில்லைநடராஜா, உதவிப்பணிப்பாளர் குமார் வடிவேல் உட்பட கூட்டத்தினரில் ஒரு பகுதியினரும் காண்பபடுகின்றனர்.



# இலக்கியச் சொற்பொழிவு




சாகித்திய விருது பெற்ற பிரபல நாவலாசிரியரான செ. யோகநாதன் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்துகின்றார். நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த திரு. அ. ஜெயரட்னம் (மேலதிக செயலாளர், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு) உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல், பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா (கிழக்குப் பல்கலைக்கழகம்) திரு. ஆர். கனகரத்தினம் (சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரும் கூட்டத்தினரில் காணப்படுகின்றனர்.



# கலாபூஷணம் விருது

கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, வருடந்தோறும் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் கலாபூஷணம் விருது வழங்கி வருகின்றது. இந்த ஆண்டு 20 தமிழ்க்கலைஞர்கள் கலாபூஷணம் விருது பெற்றனர்.

இவர்களுக்கான விருதுவழங்கும் வைபவம், ஜுலை மாதம் 22ம் திகதி மாலை 3 மணிக்கு ஜோன் டீ சில்வா மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு கலாசார சமய அலுவல்கள்அமைச்சர் லக்ஷ்மன் ஜயகொடி, பிரதியமைச்சர் பேராசிரியர் ஏ.வி. சுரவீர ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அமைச்சர்களின் சிறப்புரைகளும், அமைச்சின் செயலாளர், திரு. ஆர்.ஏ.ஏ. ரணவீர, மேலதிக செயலாளர் திருமதி ஆர். கைலாசநாதன், மேலதிக செயலாளர் ஜனாப் ஏ.சி.எம். ராசிக் ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன.

கலாபூஷணம் விருது வழங்கலைத் தொடர்ந்து பௌத்த, இந்து, இஸ்லாம் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் நாட்டியங்களும் இடம்பெற்றன.

திணைக்களத்தின் சார்பில், பணிப்பாளர் திரு, எஸ் தில்லை நடராஜா, பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விருது பெற்ற கலைஞர்களின் விபரம் வருமாறு :

01. க.நா. கணபதிப்பிள்ளை - சின்னமணி (வில்லிசை)
02. பெரியதம்பி சுப்பிரமணியம் (ஓவியம்)
03. முருகேசு வ்வணகுலசிங்கம் (கர்நாடக இசை - வாய்ப்பாட்டு)
04. பேரம்பலம் சந்திரசேகரம் (கர்நாடக இசை - வாய்ப்பாட்டு)
05. குமாரவேலு பாலசிங்கம் - கைதடி பழனி (தவில்)
06. ஆறுமுகம் ஜீவரட்ணம் (சிற்பம்)
07. நாகலிங்கம் செல்லத்துரை (மிருதங்கம்)
08. திருமதி அக்னெஸ் இராசம்மா மரியாம்பிள்ளை (கர்நாடக இசை - வாய்ப்பாட்டு)
09. சுப்பர் கணபதிப்பிள்ளை (கோலாட்டம்-பாரம்பரியக் கலைகள்)
10. ஐயப்பமேனன் விக்கிரமன் (மிருதங்கம்)
11. மங்களம் இராஜாமணி கோவிந்தராஜா (கர்நாடக இசை - வாய்ப்பாட்டு)
12. ஜோசப் அருளானந்தம் - ஜீவன் ஜோசப் (கர்நாடக இசை - வாய்ப்பாட்டு)
13. காசுபதி கிருஷ்ணபிள்ளை (சிற்பம்)
14. சுப்பிரமணியம் துவாரகா கேதீஸ்வரன் (பரதநாட்டியம்)
15. நாகமுத்து ஆறுமுகம் (நாதஸ்வரம்)
16. விமலலோஜினி கனகேஸ்வரன் (கர்நாடக இசை - வாய்ப்பாட்டு)
17. பண்டாரம் சின்னராசா (மிருதங்கம்)
18. அப்புக்குட்டி முருகவேள் (நாட்டுக்கூத்து)
19. கருப்பையா கார்த்திகேசு (பல்துறை - நாடகம்)
20. நவாலியூர் நா. செல்லத்துரை (பல்துறை - நாடகம்)

## சைவப்பண்பாட்டில் ஆலயங்கள்

திணைக்களம் நடத்தும் மாவட்டங்களுக்கான சொற்பொழிவுத் தொடரின் 9வது உரை ஜுலைமாதம் 19ம் திகதி காலை, ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

ஹட்டன் சைவ நற்பணி மன்றத்துடன் இணைந்து நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு மன்றத் தலைவர் டாக்டர் க. கண்ணாசன் தலைமை வகித்தார். திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டார்.

முன்னாள் கல்விப் பணிப்பாளரான திரு. குமாரசாமி சோமசுந்தரம் (எம்.ஏ) அவர்கள் 'சைவப் பண்பாட்டில் ஆலயங்கள்' எனுப் பொருளில் உரை நிகழ்த்தினார்.

நற்பணிமன்ற அறநெறிப்பாடசாலை ஆசிரியை, திருமதி இந்திராதேவி சண்முகரட்ன சர்மா அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

அன்றைய தினம், 1996ம் ஆண்டு திணைக்களம் நடாத்திய இந்துசமயப் போட்டியில் வெற்றி பெற்ற நுவரெலிய மாவட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெற்றது.

---

## இந்துசமயப் போட்டிப் பரிசளிப்புகள்

திணைக்களம் 1995, 1996ம் ஆண்டுகளில் அகில இலங்கைரீதியாக நடாத்திய இந்துசமயப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவங்கள் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்றன.

கம்பஹா மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம், செப்டம்பர் மாதம் 19ம் திகதி காலை 8 மணிக்கு பேலிய கொடை ஸ்ரீ பூபால விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. அதேதினத்தன்று காலை 9 மணிக்கு நீர்கொழும்பு பிரதேச மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம், நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு குருநாகல் மாவட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம், ஸ்ரீ கதிரேசன் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

அன்று மாலை 4 மணிக்கு கேகாலை மாவட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம், கோவிந்த தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

பணிப்பாளர் திரு எஸ். தில்லை நடராஜா அவர்கள் இந்நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்டு பரிசு, சான்றிதழ் என்பவற்றை வழங்கினார்.

அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம், அக்டோபர் மாதம் 9ம் திகதி கல்முனை இராம கிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

காலி மாவட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம், அக்டோபர் மாதம் 10ம் திகதி காலை, காலி சிவன்கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது.

மொனராகலை மாவட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அக்டோபர் மாதம் 11ம் திகதி காலை மொனராகலை, விபுலானந்த தமிழ் வித்தியாலத்தில் நடைபெற்றது.

இப்பரிசளிப்பு வைபவங்களுக்கான ஒழுங்குகளை உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

# முத்தமிழ் விழா

திணைக்களத்தின் ஏற்பாட்டில், அக்டோபர் 24,25ம் திகதிகளில் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் முத்தமிழ் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

முதல்நாள், பணிப்பாளர் திரு எஸ். தில்லை நடராஜா அவர்கள் தலைமையில் விழா ஆரம்பமானது. தோட்ட வீடமைப்பு பிரதி அமைச்சர் கௌரவ பெ. சந்திரசேகரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

திரு கே. சசிதரன், திரு என். கவிதாஸ் ஆகியோரின் நாதஸ்வரத்திற்கு கலாபூஷணம் என். குமரகுரு, திரு என். சுந்தரலிங்கம், திரு ஏ. மோகனதாஸ், திரு கண்ணதாசன் ஆகியோர் தவில் வாசித்தனர். இந்த மங்கள இசையைத் தொடர்ந்து பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து திருமதி நந்தினி விஜயரட்னத்தின் நெறியாள்கையில் வீணைக்கச்சேரி இடம்பெற்றது. திருமதி. ஜெயந்தி இரத்தினகுமார், திருமதி நளாயினி சிவகுமார், செல்விகள், ரம்யா கணேஷன், சேய்மணி திருஞானசம்பந்தர் ஆகியோர் கச்சேரியில் வீணை இசைத்தனர்.

அடுத்து, மாத்தளை கே. ரெங்கநாதன் அவர்களின் நெறியாள்கையில் மலையகத்தின் காமன் கூத்து நிகழ்ச்சியினை மாத்தளை தமிழ்ப்பாடசாலை மாணவர்கள் வழங்கினர்.

மாத்தளை இந்துக்கல்லூரி ஆசிரியை திருமதி சியாமளாதேவி வடிவேல் அவர்களின் நெறிப்படுத்தலில் தீச்சட்டி நடனம், கும்மி, கரகம் ஆகிய நடனங்கள் இடம்பெற்றன.

தொடர்ந்து, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். விஸ்வநாதன், "தமிழர் மரபுவழி நடனத்தில் இசை வடிவங்கள்" எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் திருமதி நளாயினி இராஜதுரை அவர்களின் நெறியாள்கையில் "சரிந்தது செங்கோல்" எனும் நாட்டிய நாடகம் நடைபெற்றது. கலாசார உத்தியோகத்தர் திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீகாந்தா அவர்களின் நன்றியுரையுடன் முதல்நாள் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகின.

அன்றைய தினம், கால்நடை அபிவிருத்தி, தோட்ட அடித்தளவமைப்பு அமைச்சர், கௌரவ எஸ். தொண்டமான் அவர்கள் பிரதம அதிதியாகவும், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி இராஜலட்சுமி கைலாசநாதன் அவர்கள் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பு உரைகள் நிகழ்த்தினர்.

தொடர்ந்து, மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசைநடனக் கல்லூரி மாணவர்களின் இசைக் கச்சேரி இடம்பெற்றது. அடுத்து பலாங்கொடை சீ.சீ. தமிழ்வித்தியாலய மாணவிகளின் கிராமியப் பாடல் இடம்பெற்றது.

'ஆயகலைகள்' எனும் பொருளில் தமிழருவி த. சிவகுமாரன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். கலாபூஷணம் கலைச்செல்வன் 'வீரசிவாஜி' எனும் வரலாற்று ஓரங்க நாடகத்தை நிகழ்த்திக்காட்டினார்.


அடுத்ததாக, திருமதி சாந்தினி சிவனேசனின் மாணவியான செல்வி ஜெயபாரதி யோகநாதனின் பரதநாட்டியம் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியை கொழும்பு நர்த்தன, நிர்ணயா திருமதி தயாநிதி விமலச்சந்திரன் நெறிப்படுத்தியிருந்தார்.

விழாவின் நிறைவாக கலாசூரி திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நாட்டியக் கலாமந்திர் மாணவியரின் நிருத்திய லாவண்யம் நிகழ்ச்சி இடம்பெற்றது.

முத்தமிழ்விழா நிகழ்வுகளை வானொலி அறிவிப்பாளர் திருமதி ரேலங்கி செல்வராஜா அவர்கள் தொகுத்தளித்தார். இருதினங்களும் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த கலைஞர்கள் ஒரே மேடையில் நிகழ்ச்சிகள் அளித்தமை குறிப்பிடத்தக்கது.



# முத்தமிழ் விழாக் காட்சிகள்



1. கால்நடை அபிவிருத்தி, தோட்ட அடித்தள அமைப்பு அமைச்சர் மாண்புமிகு எஸ். தொண்டமான் அவர்கள் உரை நிகழ்த்துவதையும், கூட்டத்தினரில் ஒரு பகுதியினரையும் படத்திற் பானலாம்

2. தோட்ட வீடமைப்பு பிரதி அமைச்சர் மாண்புமிகு பெ. சந்திரசேகரன், பணிப்பாளர் எஸ். தில்லைநடராஜா, மேலதிக செயலாளர் திருமதி ஆரி. கைலாசநாதன், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் குமார் வடிவேல் ஆகியோரும் பிரமுகர்களும் கலைநிகழ்ச்சிகளை ரசிக்கின்றனர்.



# முத்தமிழ் விழாக் காட்சிகள்



1. விழாவில் இடம்பெற்ற திருமதி நந்தினி விஜயரட்னம் குழுவினரின் வீணைக் கச்சேரி.

2. நாட்டியக் கலாமந்திர் மாணவரியரின் நடன நிகழ்ச்சி.

# இரத்தினபுரி மாவட்ட கலாசார விழா - 1998

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களமும் பலாங்கொடைப் பிரதேசத்திலுள்ள இந்து கலாசார மன்றமும் இணைந்து இரத்தினபுரி மாவட்ட கலாசார விழாவினை 05.09.1998 ம் திகதி பலாங்கொடை சீ.சீ. தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடத்தின. மங்கள் விளக்கேற்றலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து இந்து இளைஞர் மன்ற மாணவிகளினால் இசைக்கப்பட்டது. இவ்விழாவிற்கு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திரு. சி. தில்லைநடராஜா அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். வரவேற்புரையை சீ.சீ. தமிழ் வித்தியாலய அதிபர் திரு. எம். சிங்காரவேல் அவர்கள் நிகழ்த்தினார்.

பிரதம விருந்தினராக கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன் அவர்களும், சிறப்பு விருந்தினராக பலாங்கொடை உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. லலிதாம்பிகை சண்முகநாதன் அவர்களும் கலந்து கொண்டனர். பலாங்கொடைப் பிரதேசச் செயலாளர் திரு. ரொட்றிக்கோ, பிரதேச சபை உறுப்பினர்களும், நகரசபை உறுப்பினர்கள் இவ்விழாவில் பங்கு கொண்டு சிறப்பித்தனர். மேலும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறங்காவலர்கள், பலாங்கொடை இந்து ஆலய அறங்காவலர்களும் பங்கு கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து திரு. என். சோமகாந்தனின் தலைமையில் இலக்கியக்கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் “தமிழ் நாடகத்துறை வளர்ச்சியும் மலையக மக்களின் பங்களிப்பும்” எனும் தலைப்பில் உடப்பு கலாபூஷணம் சோமஸ்கந்தர் அவர்களும் “இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தில் இலக்கிய வளர்ச்சி” எனும் தலைப்பில் தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. இரகுபரன்அவர்களும் விரிவுரையாற்றினர். பின்னவலை தமிழ் வித்தியாலய அதிபர் திரு. கே. சித்திரவேல் அவர்களின் நன்றியுரையுடன் காலை நிகழ்ச்சிகள் இனிது முடிவுற்றன.

மங்கள விளக்கேற்றலுடன் மாலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. றை தமிழ் வித்தியாலய அதிபர் திரு. என். ஜெயராஜ் அவர்களின் வரவேற்புரை இடம்பெற்றது. மேலும் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு. சி. தில்லைநடராஜா அவர்களின் தலைமையுரையும் சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன் அவர்களின் சிறப்பு விருந்தினர் உரையும் இடம்பெற்றன. மேலும் காவடியாட்டம், கோலாட்டம், தப்பிசை, உடுக்கிசை, குழுப்பாடல், கிராமிய நடனம், வில்லிசை, கரகம், இலக்கிய நாடகம், இஸ்லாமியப்பாடல், தமிழ்த்தாய் வாழ்த்து நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவற்றில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இறுதியாக இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திருமதி நிர்மலா கருணானந்தராஜா அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் யாவும் இனிது முடிவுற்றன.

தொகுப்பு- க.நிர்மலா
கலாசார அலுவலர்

*எல்லோரிடமும் அன்பாய் இருக்க வேண்டும் என்பது தான் தொண்டு செய்பவனுக்கு இலட்சணம்.*


*பொதுத் தொண்டு என்பதற்காக வீட்டு மனிதர்களிடம் எரிந்து விழுந்து கொண்டிருந்தால் தொண்டு செய்து என்ன புண்ணியம்? சித்த சுத்தி எப்படி ஏற்படும்?*

*குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதைப் போல இது ஆகிவிடாதா?*

*-காஞ்சிப்பெரியவர்*



## இரத்தினபுரி - தமிழ்க் கலாசார விழா



இரத்தினபுரி மாவட்ட தமிழ்க் கலாசார விழாவில் பிரபல நாவலாசிரியர் என். சோமகாந்தன், கலாபூஷணம் உடப்பு எஸ். சோமாஸ்கந்தர், திரு. க. இரகுபரன் (விரிவுரையாளர் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்) திரு. ந. ஜெயராஜன் (அதிபர் றை. தமிழ் மகா வித்தியாலயம்) ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

# கேகாலை மாவட்ட கலாசார விழா - 1998

திணைக்கள ஏற்பாட்டில் எட்டியாந்தோட்டை பிரதேசத்திலுள்ள சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியாலய மண்டபத்தில் 21.11.1998 ஆம் திகதி சனிக்கிழமை கேகாலை மாவட்ட கலாசார விழா நடந்தேறியது. மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. சென்மேரிஸ் தமிழ் மகா வித்தியாலய மாணவிகளால் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. இவ்விழா திணைக்களப் பணிப்பாளர் திரு. எஸ் தில்லைநடராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

எட்டியாந்தோட்டை தமிழ்மகாவித்தியாலய அதிபர் திரு. என். கணேசலிங்கம் அவர்கள் வரவேற்புரையினை நிகழ்த்தினார். பிரதம விருந்தினராக கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திருமதி ஆர். கைலாசநாதன் கலந்து கொண்டு உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து கம்பன்கழக அமைப்பாளர் கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து புளக்கொகுபிட்டிய தமிழ் மகா வித்தியாலய அதிபர் திரு ரி. சுந்தரலிங்கம் அவர்களின் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெற்றது. "எமது சமுதாய தளர்வுக்கு பெரிதும் காரணம் முதியோரின் நெறிமுறையற்ற வழிகாட்டல்" எனும் தலைப்பில் திரு கா.வெ.ஸ்ரீ. கணேஷ்ராஜா, திரு. கா. இராஜசேகர், செல்வி. செல்லமுத்து நவமணி ஆகியோரும், "எமது சமுதாய தளர்வுக்கு பெரிதும் காரணம் பொறுப்பற்ற இளைஞர் சமுதாயம்" எனும் தலைப்பில் திரு ஆ. அன்ரன் போல், திரு எஸ்.பி. அருமைநாதன், திரு என். கணேசலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டு வாதிட்டனர். திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திருமதி நிர்மலா கருணானந்தராஜா அவர்களின் நன்றியுரையுடன் காலை நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

மாலை நிகழ்ச்சிகள் கேகாலை மாவட்ட அமைப்பாளர் திரு எஸ். ரவிகுமார் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகின. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு எஸ். தில்லைநடராஜா அவர்களின் தலைமையுரையைத் தொடர்ந்து கிராமிய நடனம் (லஷ்மி அறநெறிப்பாடசாலை), காவடி நடனம் (ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்), கோலாட்டம் (புளத்கொகுபிட்டிய தமிழ் மகா வித்தியாலயம்) கும்மி கொட்டுவோம் (பனாவத்தை தோட்ட மகளிர்கள்), பரதநாட்டியம் (இந்துமாமன்ற கலாலயம்), இசைக்கோலம் (புளத்கொகுபிட்டிய தமிழ் மகா வித்தியாலயம்), நடனம் (தெகியோவிற்ற தமிழ் மகா வித்தியாலயம்), கண்ணன் நடனம் (களனி தமிழ் மகா வித்தியாலயம்), கும்மி நடனம் (புளத்கொகுபிட்டிய தமிழ் மகா வித்தியாலயம்), கவிதை நாடகம் (எட்டியாந்தோட்டை சென் மேரிஸ் தமிழ் மகாவித்தியாலயம்), கரகம் (நிலூபொலட்டக தோட்டம்), கோலாட்டம் (எட்டியாந்தோட்டை சென்மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம்), காவடி ( இந்து மாமன்றம்), தப்பும், உடுக்கிசையும் (லயவிந்நியாசம்- பனாவத்தை எஸ்டேட்), தாலாட்டு-நாட்டார் பாடல் (பனாவத்தை தோட்ட கலைஞர்கள்), காமன்கூத்துக் கல்லோலம் (அண்ணாவிமார்கள் - பனாவத்தை - 2ம் பிரிவு), கும்மி நடனம் (அன்னையர் குழு), தாலாட்டு (ஒக்லண்ட தோட்டம்), பரதநாட்டியம் (பாரதநிருத்ய ரஞ்சன உயர் கல்வி கலாலயம்), குழுநடனம் (அம்பன்பிட்டிய பரத கலாலயம்), ஆகிய கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இறுதியாக சென்மேரிஸ் தமிழ் மகாவித்தியாலய ஆசிரியர் திரு எஸ்.பி. அருமைநாதன் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது முடிவு பெற்றது. காலை நிகழ்ச்சிகளை வறக்காப்பொல இணைப்பாளர் திரு எஸ்.ஓ.பி. சிவராஜா அவர்களும், மாலை நிகழ்ச்சிகளை திருமதி ரேலங்கி செல்வராஜா அவர்களும் தொகுத்து வழங்கினர்.

தொகுப்பு-
*நிர்மலா கருணானந்தராஜா*
*(கலாசார உத்தியோகத்தர்)*

# வடமேல் மாகாண அருள்நெறிவிழா

திணைக்களத்தின் அநுசரணையோடு புத்தளம் இந்துமகாசபை ஏற்பாடு செய்து நடத்திய வடமேல் மாகாண அருள்நெறிவிழா, அக்டோபர் மாதம் 17ம் திகதி புத்தளம் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவினை, குருணாகல் மாவட்ட அறநெறிப்பாடசாலைகள், ஆலயங்கள், இளைஞர் மன்றங்கள் என்பன இணைந்து மிகச் சிறப்பாக நடாத்தின. முதலம்சமாக அறுபத்துமூன்று நாயன்மாராக வடிவம்கொண்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களுடன், இந்துப்பொதுமக்கள், பிரமுகர்கள் கலந்து கொண்ட ஆன்மீக ஊர்வலம், புத்தளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்டு விழாமண்டபத்தை வந்தடைந்தது.

ஊர்வலத்தைத் தொடர்ந்து திணைக்களப் பணிப்பாளர் திரு எஸ். தில்லைநடராஜா அவர்களின் தலைமையில் விழா ஆரம்பமானது. புத்தளம் மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்கள், கொடிமேற்றிவைத்து அறநெறிக்கீதம், பஞ்சபுராணம் என்பவற்றை இசைத்தனர்.

புத்தளம் இந்துமாமன்றத் தலைவர் திரு தா. முருகேசம்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்து ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய பிரதமகுருக்கள் ஆசியுரை வழங்கினார்.

திரு. தில்லைநடராஜா அவர்களின் தலைமையுரையைத்தொடர்ந்து மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெற்றது.

கலாபூஷணம் பெ. சோமஸ்கந்தர் அவர்களின் தலைமையில், நடைபெற்ற கவியரங்கில், கவிஞர்கள் வீரசொக்கன், தில்லையடிச்செல்வன், ஆகியோர் பங்குகொண்டு கவிதை படித்தனர்.

அடுத்து குளியாப்பிட்டிய ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய, குருணாகல் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

தொடர்ந்து "வடமேல் மாகாணத்தில் இந்துசமய கலாசார நடடிக்கைகள் மேலோங்கியுள்ளதா இல்லையா" எனும் பொருளில் விவாதம் இடம்பெற்றது. இதற்கு நல்லை ஆதீன உறுப்பினர் திரு எஸ் சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். சார்பாக, புத்தளம் இந்துமகாவித்தியாலய மாணவர்களும், எதிராக உடப்பு ஆண்டிமுனை இராமகிருஷ்ண மகாவித்தியாலய மாணவர்களும், வாதித்தனர்.

அடுத்து மாணவர்களுக்கான அறிவுப்புதிர்ப் போட்டி இடம்பெற்றது. பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் இதற்குத் தலைமை வகித்தார். அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன், உதவிப்பணிப்பாளர் திரு வீ. விக்கிரமராஜா, ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினார்.

அடுத்து முந்தல் திரௌபதி அம்மன், உடப்பு இராமகிருஷ்ண அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

பிற்பகல், அருள்மொழியரசி, வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், "இதிகாசம் காட்டும் வாழ்க்கைநெறி" எனும் பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார்.

முன்னேஸ்வரம் வடிவாம்பிகா, மாவத்தகம அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, திரு எஸ். சத்தியமூர்த்தி "நவீன விஞ்ஞானத்தில் இந்துமதத்தின் பங்களிப்பு" எனும் பொருளில் சிறப்புரை வழங்கினார்.

தொடர்ந்து புத்தளம் இந்துமாமன்ற அறநெறிப்பாடசாலை மாணவிகளான செல்வி, ஷர்மிளா, செல்வி துஷ்யந்தி ஆகியோரின் பரதநாட்டியம் இடம்பெற்றது.

இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களின் சொற்பொழிவு விழாவின் சிறப்பம்சமாக அமைந்தது. புத்தளம் பிரதேச சமயப்பெரியார்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் வழங்கப்பட்டது.

வடமேல் மாகாண இந்துகலாசார ஒன்றியத் தலைவர் திரு அ. கனகரத்தினம் அவர்களின் நன்றியுரையுடன் விழாவைபவம் இனிது நிறைவு பெற்றது.

புத்தளம் இந்துமகாசபையின் தலைவர், உறுப்பினர்களும், விழாக்குழுவினரும் சிறப்பான முறையில் இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

திணைக்களத்தின் சார்பில், கலாசார உத்தியோகத்தர் மாத்தளை பி. வடிவேலன், விழாவுக்கான ஏற்பாடுகளை மேற்கொடிருந்தார்.

தொகுப்பு- பி. வடிவேலன்
*(கலாசார உத்தியோகத்தர்)*

# புத்தளம் - அருள்நெறி விழா




வடமேல் மாகாண அருள்நெறி விழாவின்போது இடம்பெற்ற ஆன்மீக ஊர்வலத்தில் அறுபத்துமூன்று நாயன்மார் வடிவில் மாணவர்கள் வரும் காட்சி.

பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், கலாசார அலுவலர் மாத்தளை வடிவேலன் ஆகியோரும் பிரமுகர்களும் உடன் வருகின்றனர்.

# அரச தமிழ் நாடக விழா

கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் அநுசரணையோடு, இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக்குழு ஏற்பாடு செய்து நடாத்திய அரச தமிழ் நாடகவிழா, செப்டெம்பர், 15,16,17ம் திகதிகளில், மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்றது.

தினம் இரண்டு நாடகங்கள் வீதம், ஆறு நாடக மன்றங்களின் ஆறு நாடகங்கள் இத்தினங்களில் மேடையேற்றப்பட்டன. தமிழ் நாடகக்குழுவின் தலைவர் திரு. வி. ஏ. திருஞானசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு முதல் நாள், கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் டபிள்யூ,டி,டபிள்யூ அபேவர்த்தன அவர்களும் இரண்டாம் நாள், இலங்கைக் கலைக்கழகத் தலைவர் கே. ஜயதிலக அவர்களும் மூன்றாம் நாள், திணைக்களப் பணிப்பாளர் திரு எஸ். தில்லை நடராஜா அவர்களும், பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

நாடகவிழாவுக்கான விருது வழங்கும் வைபவம் அக்டோபர் மாதம் 5ம் திகதி மருதானை டவர் மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு கலாசார, சமய அலுவல்கள் பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ.வி. சுரவீர அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

அன்றைய தினம் நாடகங்களுக்கான விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டதோடு விழா மலரும் வெளியிட்டுவைக்கப்பட்டது.

நாடகவிழாவுக்கான ஏற்பாடுகளையும், விருதுவழங்கும் வைபத்திற்கான ஏற்பாடுகளையும் தமிழ்நாடகக்குழுவின் உதவியோடு குழுவின் செயலாளர் திரு வீ. விக்கிரமராஜா அவர்கள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

# சுவாமி விபுலானந்தா இசைநடனக் கல்லூரி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம்

திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியின் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம் செப்டெம்பர் மாதம் 9ம் திகதி கல்லூரியின் இராஜதுரை அரங்கில் நடைபெற்றது.

பணிப்பாளர் திரு எஸ். தில்லைநடராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஜீவனானந்தாஜி மஹராஜ், மட்/அரச அதிபர் திரு அ.கி. பத்மநாதன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

கல்லூரி மாணவர்களின் தமிழ் வாழ்த்தினைத் தொடர்ந்து விரிவுரையாளர் திருமதி வ. சங்கரநாராயணன் வரவேற்புரை நிகழ்த்தினார். பதில் அதிபர் திருமதி கே. ஞானதாஸ் கல்லூரி அறிக்கை வாசித்தார்.

மாணவிகளுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கல் வைபவத்தைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்களின் பரதநாட்டிய இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பிரதி அதிபர் திருமதி பாலாம்பிகை இராஜேஸ்வரன் அவர்களின் நன்றியுரையுடன் வைபவம் நிறைவுபெற்றது.

வாய்ப்பாட்டிற் பத்துப்பேரும், நடனத்தில் ஆறுபேரும், வயலின் ஒருவரும், மிருதங்கம் ஒருவரும், டிப்ளோமாச் சான்றிதழ்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்து சமய ஆய்வரங்கு - 1998

திணைக்களம் ஏற்பாடு செய்து நடாத்திய இந்துசமய ஆய்வரங்கு நவம்பர் மாதம், 27, 28, 29 ஆம் திகதிகளில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

27ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை தொடக்க வைபவம் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித்தலைவர் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு மிஷன்தலைவர் ஸ்ரீமத்சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.பி. தேவராஜ் அவர்களும் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர்.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் வேதாத்யயனம் நிகழ்த்தினார். பண்ணிசைப் பாவலர் பி.வி. இராமன் அவர்கள் திருமுறை ஓதினார்.

பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து, ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின் அருளுரை இம்பெற்றது.

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி ஆர். கைலாசநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பணிப்பாளர் திரு எஸ். தில்லை நடராஜா தொடக்கவுரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் தலைமையுரையைத் தொடர்ந்து, இந்தியாவில் இருந்து வந்து ஆய்வரங்கிற் கலந்துகொண்ட பாண்டிச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர் அ. பாண்டுரங்கன், பெங்களூர் சித்ரகலா நிலையத்தின் தலைவர் பேராசிரியர் திருமதி சூடாமணி நந்தகோபால் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர்.

அருள்மொழியரசி, திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள், திணைக்களத்தின் புதிய வெளியீடுகளான இந்துக்கலைக்களஞ்சியம் –பகுதி 4, சுதந்திரத்திற்குப்பின் இலங்கை–ஒரு பன்முகப் பார்வை, ஆய்வரங்குக் கட்டுரைகள்–1997, வரதபண்டிதம் ஆகிய நான்கு நூல்களையும் அறிமுகம் செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர் பி.பி. தேவராஜ் பா. உ. அவர்களின் உரையைத் தொடர்ந்து, சுவாமி ஆத்மகனாநந்தா, திரு பி.பி. தேவராஜ் ஆகியோரால் புதிய நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

உதவிப்பணிப்பாளர் திரு குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடனும் திருமுறைப் பண்ணோடும் அன்றைய நிகழ்வுகள், நிறைவுபெற்றன.

28ம் திகதி காலை வெள்ளவத்தை தமிழ் வித்தியாலய ஆசிரியை திருமதி கங்கேஸ்வரி வடிவேல் அவர்களின் திருமுறை ஓதலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தி, அமர்வுகளைத் தொடக்கி வைத்தார்.

முதலாம் அமர்வில் சப்ரகமுவ பல்கலைக்கழக மொழியியற் துறை விரிவுரையாளர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன், ஆய்வுரை நிகழ்த்தினார். இவ்வுரைக்கு யப்பான் கக்சூயின் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. க. இரகுபரன் 'சைவ இலக்கியம் – தேவாரம்' எனும் பொருளில் ஆய்வுரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் க. அருணாசலம் அவர்களின் சமணசமய ஆய்வுரை இடம்பெற்றது.

இரண்டாம் அமர்வில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு வ. மகேஸ்வரன் அவர்களின்

"வைணவம்" எனும் பொருளில் ஆய்வுரை இடம்பெற்றது. இவரது ஆய்வுரைக்கு புதுவை பல்கலைக்கழக பேராசிரியர் அ. பாண்டுரங்கன் கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து, கோயிற் கலைகள் தொடர்பாக பெங்களூர் சித்ரகலா நிலையத் தலைவர் திருமதி சூடாமணி நந்தகோபால் அவர்களின் விரிவுரை இடம்பெற்றது. புகைப்படங்களோடு அவர் தமது ஆய்வுரையை நிகழ்த்தினார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் திருமதி சூடாமணி நந்தகோபால் அவர்களின் விரிவுரையுடன் ஆரம்பமாகின. ஒளிப்பட விளக்கங்களோடு திருமதி சூடாமணி அவர்கள், கோயிற் கட்டிடக் கலைகள் தொடர்பாக ஆய்வுரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து, பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்வி அம்பிகை வேல்முருகு அவர்களின் விரிவுரை இடம்பெற்றது.

அடுத்து பேராசிரியர் அ. பாண்டுரங்கன் அவர்களின் "வைணவக் கோயில்களில் வழிபாட்டுநெறிகள்" என்ற ஆய்வுரை இடம்பெற்றது. இவரது உரைக்கு பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு வ. மகேஸ்வரன் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

நான்காம் அமர்வு திருமதி சூடாமணி நந்தகோபால் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. மஹரகம தேசிய கல்வி நிறுவக திட்ட அலுவலர் செல்வி மீரா வில்லவராயர், கொழும்பு விமலோதயா நாட்டிய நிலைய இயக்குநர் செல்வி சுபாஷினி பத்மநாதன் ஆகியோரின் விரிவுரைகள் இடம்பெற்றன.

ஆய்வரங்கிற் கலந்து கொண்டோரின் கலந்துரையாடலைத் தொடர்ந்து, பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் தொகுப்புரை வழங்கினார்.

பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் நன்றியுரையுடன் ஆய்வரங்கு நிறைவுபெற்றது.

இருதினங்களும், திணைக்கள புதிய வெளியீடுகள் 20% கழிவுவிலையில் திணைக்களத்தால் விற்பனை செய்யப்பட்டன.

"இந்து சமயமும், கலாசாரமும்" எனும் தலைப்பில் இடம்பெற்ற இவ்வாய்வரங்கில், இந்துசமயப் பிரிவுகள், வழிபாட்டுமுறைகள், தத்துவங்கள் போன்ற பல அம்சங்களும் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆய்வரங்கின் பின்னணியில் பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் அமர்வுகளைத் திட்டமிட்டு நெறிப்படுத்தி உதவினார். பணிப்பளாரின் வழிகாட்டலில் பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல், தகவல் அலுவலர் திரு. ம. சண்முகநாதன், ஆராய்ச்சி உதவியாளர் செல்வி கல்யாணி நாகராஜா, ஆகியோரும் கலாசார உத்தியோகத்தர்கள் ஏனைய உத்தியோகத்தர்களும் இணைந்து பணி செய்தனர்.

## அன்பு

அன்பு என்பது ஓர் அபூர்வமான சக்தி. இதை யார் நிலையாக வைத்து வாழ்கிறார்களோ அவர்களுக்கு தெய்வம் கூடவே நின்று துணை புரியும். ஒவ்வொரு நாளும் விடியும் பொழுது அன்புடன் துவங்க வேண்டும். அன்று செய்கின்ற காரியங்கள் அனைத்திலும் அன்பு கலந்து இருக்க வேண்டும். இரவு துயிலச் செல்லும் போது அன்புடனே செல்ல வேண்டும். இறைவனை அடைய எளிதான வழி இதுவே.

- சாயிபாபா

# ஆய்வரங்கிற் கட்டுரைகள் சமர்ப்பித்தோர்

| | | |
|---|---|---|
| 1. | வைணவக் கோயில்களில் வழிபாட்டு நெறிகள் | – பேராசிரியர் அ. பாண்டுரங்கன்<br>புதுச்சேரி, இந்தியா |
| 2. | i கோயிற் கலைகள் | – பேராசிரியர் சூடாமணி நந்தகோபால் |
| | ii கோயிற் கட்டிடக்கலை | – சித்ரகலா நிலையம்,<br>பெங்களூர், இந்தியா |
| 3. | சமண சமயம் | – பேராசிரியர் க. அருணாசலம்,<br>தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம். |
| 4. | வைணவம் | – திரு வ. மகேஸ்வரன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை,<br>பேராதனைப் பல்கலைக்கழகம். |
| 5. | சைவசமய அடிப்படைக் கோட்பாடுகள் | – திரு. கனகசபாபதி நாகேஸ்வரன்<br>முதுநிலை விரிவுரையாளர்,<br>மொழியியற் துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம். |
| 6. | சைவ இலக்கியம் – தேவாரம் | – திரு க. இரகுபரன்<br>விரிவுரையாளர், தமிழ்த்துறை,<br>தென்கிழக்குப் பல்கலைக்கழகம். |
| 7. | முருக வழிபாடு | – செல்வி. அம்பிகை வேல்முருகு<br>விரிவுரையாளர்,<br>தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்ழகம் |
| 8. | இசைக்கலைவளர்ச்சி | – செல்வி மீரா வில்லவராயர்<br>திட்ட அலுவலர்,<br>தேசிய கல்வி நிறுவகம், மஹரகம. |
| 8. | தமிழகத்தில் நாட்டியக் கலை வளர்ச்சி | – செல்வி சுபாஷினி பத்மநாதன்<br>இயக்குநர், விமலோதயா பரதநாட்டிய நிலையம்,<br>கொழும்பு. |

# திணைக்களத்தின் புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | இந்துக் கலைக்களஞ்சியம் | – தொகுதி 4 (கா–கௌ)<br>விலை ரூ. 250/– |
| 2. | ஆய்வரங்குக் கட்டுரைகள் | – 1997ம் ஆண்டு இடம்பெற்ற இந்துசமய ஆய்வரங்கின் கட்டுரைத் தொகுப்பு.<br>விலை ரூ. 100/– |
| 3. | சுதந்திரத்திற்குப் பின் இலங்கை – ஒரு பன்முகப்பார்வை | – இலங்கையின் சுதந்திரதினப் பொன்விழாவையொட்டி தொகுக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்பு.<br>விலை ரூ.80/– |
| 4. | வரதபண்டிதம் | – யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வரத பண்டிதர் அவர்களால் எழுதப்பட்ட பிள்ளையார் கதை, பிள்ளையார் புராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், குருநாதசுவாமி கிள்ளைவிடு தூது அமுதாகரம் என்னும் ஆறு நூல்களின் திரட்டு.<br>விலை ரூ.100/– |

யாழ்ப்பாணத்தில்

# ஓங்கிய ஆன்மீகப் பேரொளிகள்

புலவர், முத்து இராசரத்தினம்,
மாத்தனை, கொக்குவில்

சாதி, இன, மத, பால், வயது உணர்வு மறைந்த இறையருளாளர்கள் அரசறிவு, சமூக அறிவு, குடும்ப அறிவுகளுக்கு அப்பாற் பட்டவர்கள். அந்த அன்பு மயப்பட்டவர்களின் திருவடிகள் தீண்டப் பெற யாழ்ப்பாணத்து மண்ணில் ஒருகிழமை ஓங்கியது ஆன்மீகப் பேரொளிகள்.

இவ்வாண்டு செப்டெம்பர் 7ம் திகதி கண்காட்சியுடன் ஆரம்பமானது யாழ்/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் (1938-1998) வைரவிழா. இக் கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக திரு. செ. மெற்றாஸ் மயில், (நிர்வாக உத்தியோகத்தர், வலயம் 1 கல்வித் திணைக்களம்) அவர்கள் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்கள்.

09.09.98 அன்று காலை 9.00 மணிக்கு திருப்பூந்தொங்கல் அலங்கார வளைவினுள் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் நடைபயில, மங்கல வாத்திய இசையாராதனைகளுடன் கோவில் வீதி வழியாக அழைத்து வரப்பட்டார்கள். தெருவோர மனைகளெங்கும் மங்கல கும்பங்கள் திருவிளக்குகளின் மத்தியில் வீற்றிருக்க புனித வண்ணப் பூக்கள் சொரிந்து மக்கள் சுவாமிகளை வழிபட்டார்கள். ஞானசீலர்கள் அந்த மரியாதைகளை விழிமூடி இறையர்ப்பணமாக்கியதில் உளம் பொங்கியது.

பாடசாலை கடந்தகால அனர்த்தங்களால் சேதமடைந்த நிலையில் இருந்தபோதும், வசதியற்ற காரணத்தால் திருத்தப்படாமலே தனது வைரவிழாவை கொண்டாட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் தவத்திரு சுவாமி விருபக்ஷானந்த மகராஜ் அவர்களின் கடைக்கண் திருப்பார்வைக்கு அது எட்டியதும், சிறிது விழிமூடினார்கள். அந்தத் திருப்பார்வை ஒளிநோக்கில் 1938ம் ஆண்டு தவத்திரு சுவாமி விபுலானந்த அடிகளாரால் அடிக்கல் நாட்டி எழுந்த யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம் திரும்பவும் மறுமலர்ச்சி பெற்றுயர்ந்து பல மாணவர்களைத் தன்னகத்தே அணைத்து ஆன்மீகப் பேரொளியை வளர்க்கும்.

கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட பழைய மாணவர் சங்கப் போஷகரும் யாழ். மேலதிக அரசாங்க அதிபரும் ஆகிய திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் சுவாமி விவேகாநந்தர் அவர்கள் சர்வமத மாநாட்டிற் பங்குகொண்டு இந்து மதம் பற்றி உரையாற்றியதை நினைவு கூர்ந்தார். சென்னை, செங்கற்பட்டு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தவத்திரு சுவாமி விருபக்ஷானந்த மகராஜ் அவர்கள் அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரின் திருவுருவப்படத்திரை நீக்கி, உண்மைப் பொருள் பற்றி உரைத்து, மாணவர்கள் சுவாமி ஸ்ரீ இராமகிருஷ்ணரின் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என அன்பு மேலிட்டுக் கூறினார்.

கொழும்பு, ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் உப தலைவர் தவத்திரு சுவாமி ஆத்மகனானந்தாஜி மகராஜ் "அன்பு தான் சிவம்" என நிறைந்தார். "ஸ்ரீ இராமகிருஷ்ணர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் இனம் மத, சாதி வேறுபாடின்றி சுவாமி ஸ்ரீ இராமகிருஷ்ணர் கொள்கையைப் பின்பற்றி வருகின்றார்கள்" என வலியுறுத்தினார். பக்தியுணர்வுடன் அன்னையின் திரு உருவிற்கு மாலையிட்டார்.

பாடசாலை அதிபர் இன்றைய புனித நாளில் தவத்திரு சுவாமிகள் இப்பாடசாலைக்குள் திருவடி வைத்துப் புனிதமாக்கியது ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அருள் நோக்கால் எனப் புளகாங்கிதம் கொண்டார். தொடர்ந்து "1938ம் ஆண்டு சுவாமி விபுலானந்தரால் அடிக்கல் நாட்டியுயர்ந்த வித்தியாலயம் குன்றக்குடி அடிகளார், கிருபானந்தவாரியார் போன்ற மகான்களின் திருவடி தீண்டப்பெற்ற திருவருள் உடையது என்றும் கூறினார். வைரவிழா சிறப்பு மலர் சுவாமி பூதேஷானந்த மகராஜுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு தவத்திரு சுவாமி விருபக்ஷானந்த மகராஜுக்கு வழங்கப்பட்டது சுவாமிகள் மலரின் ஆய்வுரை பற்றி உணர்ச்சிபூர்வமாக உரையாற்றினார்கள்.

# புண்ணியம் புரிவார்க்குப் பூவுண்டு நீருண்டு

நால்வர் நமக்கு நன்குணர்த்திய நன்னெறி திருக்கோவில் வழிபாடு. நாற்பாதத்தினருக்கும் நன்மை பயப்பது கோவில் வழிபாடு.

நால்வர் ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசு, ஆளுடைய நம்பி, ஆளுடைய அடிகள்

நாற்பாதர் சரியை, கிரியை, யோகம், ஞான நெறி ஒழுகுபவர்.

சரியைத் தொண்டு திருக்கோவிலுக்குச் செல்லுதல் முதலாகப் பலபட விரிவடையும். அலகிடல், மெழுகிடல், பூமாலை புனைதல், புகழ்பாடுதல், கும்பிடல், கூத்தாடுதல், இறைவனை அலறி அழைத்தல் என்னும் தொடக்கத்தன என அப்பர் திருவாக்கால் அறியலாம்.

ஆளுடைய அடிகளுடைய மணிவாக்காலும் அறியலாம். ஆடுதல், அன்பு செலுத்துதல், என்புருகிப் பாடுதல், பணிதல், தேடுதல், பூமாலை புனைதல், தெருதோறு அலறுதல் என்ப.

சரியைத் தொண்டு அனேகம் உள. அதில் ஒரு தொண்டைச் செய்தாலே இறைவன் அருள் பெறலாம்.

சிவபெருமானை வணங்க வேண்டும். சிவபுண்ணியம் புரிய வேண்டும், என்று எண்ணுபவர்களுக்குத் திருமூலர் மிக இலகுவான வழி ஒன்றை உணர்த்துகின்றார். அந்தப் புண்ணியத்தினைப் புரிவதற்கு வேண்டுவன தேடி அலைய வேண்டாம்.

எங்கும் பூ உண்டு. அது போலவே நீரும் உண்டு. புண்ணியம் புரிவதற்குப் பொருள் இல்லையே என்ற ஏக்கம் வேண்டாம் என்பதை ;

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்பர். பூ இருக்கிறது. நீர் இருக்கிறது. இரண்டினாலும் செய்யும் வழிபாடு பலன் தருமா? பொருள் செலவு செய்யாமல் செய்யும் பூசையால் பொருள் வருமா? சிவன் அருள் கிட்டுமா? என்ற ஐயம் எழுவதும் ஒருவகையில் இயல்பே.

அதை உற்று உணர்ந்து அடுத்த அடியில் திருமூலர் அதற்குப் பதிலும் தருவார் :

பூவினாலும் நீரினாலும் புரியும் பூசையினைப் பார்த்துச் சிவபெருமான் அருள் பாலிப்பர்.

"அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும். (திரு 1828)

வல்லவர்களால் தான் பூவாலும் நீராலும் போற்றலாகும். அந்த வல்லமை தான் என்ன? வீரக்கழல் அணிந்த சிவபிரானைக் காணும் வல்லமை காணவல்லவர்கள் போற்ற வல்லவர்கள் என மந்திரம் வகுப்பார்.

"கனைகழல் ஈசனைக் காண்குற வல்லார் புனைமலர் நீர்கொண்டு போற்றவல் லாரே" (1826)

மூவர் முதலிகள், பூவும் நீரும் பலன்தரும் வழிபாடு என்பதைப் பரக்கப் பாடி அருளியுள்ளார்கள்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அடியார்களை அழைத்துப் பாடுவார். அடியார்களே! வாருங்கள். அன்று அலர்ந்த மலர்களை இட்டு வணங்குவோம். அதனால் உய்தி பெறலாம்.

*சிவ. சண்முகவடிவேல்*
*ஏழாலை, சுன்னாகம்.*

"வம்மின்னடி யீர்நாண்மல ரிட்டுத்தொழு துய்ய" என்பது திருவீழிமிழலைப் பதிகத்தில் வரும் வாக்கு.

திருநெடுங்களப் பெருமானே! அடியார்கள் பொன் போன்ற திருவடிகளைத் தொழுவதற்குப் பூக்களையும் நீரினையும் சுமந்து வருவார்கள். அவர்களுடைய துன்பங்களை நீக்க வேண்டும்.

"பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும் நின்னடியா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே"

திரு ஆக்கூர் திருக்கோவில் நிகழ்வைப் பின்வருமாறு நினைவூட்டுவார்.

"பொன்னடிக்கே நாடோறும் பூவோடு நீர்சுமக்கும் தன்னடியார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே"

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்களில் பூவையும் நீரையும் போற்றத் தவறவில்லை.

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்" என்று முதல் திருப்பதிகத்திலேயே எடுத்துப் பாடுவார்.

வாழ்த்த வாயுண்டு, நவில நாவுண்டு, வழிபாடு செய்ய இட்டுகொள்ளப் பூ இருக்கிறது. நீர் இருக்கிறது. நமனுடைய கோபத்திற்கு எதற்காக அஞ்சவேண்டும்? என்று உறுதியாகக் கேட்பார்.

"கற்றுக் கொள்வன வாயுள நாவுள இட்டுக் கொள்வன பூவுள நீருள எற்றுக் கோநம னால்முனி வுண்பதே

இன்னும்,

"மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப் போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்"

"கடி மாமலர் தூவிநின்று – கைகாள் கூப்பித் தொழீர்"

"அரன் கோயில் வலம்வந்து – பூக்கையால் அட்டிப்போற்றி யென்னாதஇவ் ஆக்கையாற் பயனென்"

உள்ளன்பில்லாதவர்களுடைய பூ நீர் வழிபாடு பொய்யானது. அவ்வழிபாட்டில் இறைவன் மறைந்து நிற்பர். வெளிப்பட்டு அருள் செய்யமாட்டார் என்பதையும் அப்பரடிகள்,

"பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே" என்று அருள்வர்.

அலர்ந்த மலர்களைத் தூவி அன்புக் கண்ணீர் சொரியும் அடியாரோடு நானும் அன்பு செலுத்துவன் என்பர் சுந்தரமூர்த்திநாயனார்.

"சுரும்பார் விண்டமலர் அவைதூவித் தூங்குகண் ணீர் அரும்பா நிற்குமனத் தடியாரொடும் அன்புசெய்வன்" என்பர்.

தேர்ந்தெடுத்த பூக்களை இட்டு மனநிறைவோடு பாதங்களைப் பரவுவார்கள் வேண்டுவனவற்றை எல்லாம் பெறலாம் என எண்ணுவார்கள். அவ் அடியார்கள் உள்ளத்தே வெளிப்பட்டு நிற்கும் உள்ளங்கவர்கள்வனே' என்பர் அருள்வாதவூரர்.

"பரந்துபல் ஆய்மலர் இட்டு முட்டாது அடியே இறைஞ்சி இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் என்னும் அன்பர் உள்ளம் கரந்து நில்லாக் கள்வனே.

எங்கும் நிறைந்தவன் இறைவன். அந்த ஆற்றின்ப வெள்ளம் நீராய் உருக்கி ஆருயிராய் நின்பவன். இதயத்தாமரையில் எழுந்தருளி இருப்பவன்.

இதயமாகிய தாமரை மலரையும் உயிராகிய நீரையும் இட்டு வழிபடின் எளிதில் அருள்பவன் எதையும் நல்குவன். ஆகா! எவ்வளவு இலகுவான வழிபாடு.

**பகர்கிற பேச்சில் யாண்டும் உறுதியும், ஊக்கமும், மகிழ்வும் திகழ்ந்து கொண்டிருக்க வேண்டும்**

# ஆசாரக்கோவையும் இளையோர்க்கான அறிவுரையும்

வளர்ந்துவரும் இளையவர்களை அறிவுரைகளால் பண்படுத்திச் செப்பனிட்டு நெறிப்படுத்தி வரும் தன்மை இன்று நேற்றல்ல காலங்காலமாக இருந்துவரும் மரபாகும். அறிவுரைகள் பலராலும், பலவழிகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் வரலாற்றின் ஆரம்ப காலத்திற்குரிய அறநூலாகிய ஆசாரக்கோவையில் இளைவர்களுக்கான அறிவுரை தாராளமாகவே எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களு ளொன்றாகிய இவ் ஆசாரக் கோவையை கடைச் சங்கமருவிய காலப் புலவரான பெருவயின் முள்ளியார் என்னும் புலவர் யாத்தார். இதில் மாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய அத்தனை ஆசாரங்களும் கோவைப்படுத்தப்பட்டுள்ளன. இக்கோவையுள் இளையவர்களுக்காக அமைந்தவற்றை உரிய வகையில் எடுத்துரைக்க வேண்டியது அவசியமானதாகும். உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் முதலிய பத்தழகுகளுடனே மாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய ஆசாரங்கள் கூறப்பட்டுள்ள இந்நூலில் இளையோர்க்கான பல அடிப்படை விடயங்களும் கோவைப்படுத்தப்பட்டுள்ளன. ஆசாரக் கோவை கூறும் கருத்துக்கள் இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டனவேயெனினும், அவை அன்றும் இன்றும் என்றும் வாழும் கருத்துக்களாகவும், மாந்தர் தம் வாழ்வுக்கு இன்றியமையாத கருத்துக்களாகவுமுள்ளன.

இன்றைய இளைய சமூகத்தினர் பல்வேறு முன்னேற்றங்களையுமுடையவர்களாயுள்ள போதும், பொதுவான ஒரு சபையிலே எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளாத நிலைப்பாடும் உள்ளது. இந்நிலையில் இளஞ்சமூகத்தினர்க்கு ஆசாரக்கோவை தரும் கருத்துக்களைத் தெளிவுபடுத்துவது பொருத்தமானதாகும்.

பெரியோரை மதித்தல் என்பது இளையோர்க்கு வேண்டிய இன்றியமையாத பண்பாகும். அறிஞர், ஆன்றோர், பெரியோர் உள்ள சபையிலே இளையோரானவர்கள் யாதொரு அங்கசேட்டையும் செய்தல் ஆகாது. கடுமையான சொற்களைக் கூறுதலோ அன்றி இருவராயிருந்து பேசுமிடத்து நடுவே செல்வதோ பண்பற்ற செயலாகும் என்கிறது ஆசாரக்கோவை.


மைதிலி விசாகரூபன்
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், நல்லூர்.


*"மன்றத்து நின்று உற்றார் மாசுதிமிர்ந்தியங்கார்*
*என்றும் கடுஞ்சொல்லுரையார், இருவராய்*
*நின்றுழியுஞ் செல்லார் விடல்"*

(ஆசார : 92)

இதன்படி பெரியார்களை எதிர்த்தோ, ஊடறுத்தோ பேசுவதும், ஊடறுத்துச் செல்லுவதும் பண்பிற்குறைவான செயலென்பதனை உணர்ந்து கொள்ளல் நன்றாகும்.

இவ்வாறே பெரியவர்களை விரல் நீட்டிக் கதைப்பது, பெரியவர் ஏதாவது கொடுக்கும் போது எழுந்து மரியாதை செய்யாது இருந்தபடியே அதனை வாங்குவதும் இளையோரிடத்தே வேண்டப்படாத செயலாகும். (ஆசார : 93). பெரியவர்கள் கூடியுள்ள இடத்திலே யாதாவது கூறவேண்டியிருப்பின், அவர்களைக் கனம்பண்ணியும், குற்றம் நிகழாதவாறு பண்பாகப் பேசப் பழகுதலும்

சிறுவர்க்கு வேண்டிய பண்பாகும் (ஆசார : 96).

தம்மிலும் பார்க்கப் பெரியவர்களுடன் ஒரே சபையிலிருந்து உணவருந்த வேண்டியேற்படின் மரியாதை நிமித்தம் அப்பெரியவர்கள் உண்ணுமுன்பு உண்பதனைத் தவிர்க்கலாம். அவர்களுடன் சேர்ந்துண்ணின் சபை ஒழுங்கைப் பேணுதற்பொருட்டு முந்த எழுந்து போகுதலையும் தவிர்க்க வேண்டும். (ஆசார : 23) எனப்படுகிறது.

வெளியே செல்லும் ஒருவரைப் பின்னால் நின்று கூப்பிடுதல், தும்முதல், 'எங்கு செல்கிறீர்கள்' எனக் கேட்டல், முதலான செயல்களும்கூட வேண்டாதவை என்கிறது ஆசாரக்கோவை. அதாவது,

*"எழுச்சிக்கட் பிற்கூவார், தும்மார், வழுக்கியும்,*
*எங்கு சேறீர் என்னார், முன்புக்கு*
*எதிர்முகமா நின்றுமுரையார், இரு சார்பும்*
*கொள்வர் குரவர் வலம்"*

(ஆசார : 57)

என்று இப்பாடலால் புலப்படுத்துகிறது பெரியவர்களது சொல்லை மதியாது காரியமாற்றலும் கூடாததாகும் (ஆசார : 16). பெரியோரைத் தொழுதலும், அவர்களைக் கண்டால் எழுந்து மரியாதை செய்தலும் வேண்டும் (ஆசார : 61).

செய்வன திருந்தச் செய்யப்பட வேண்டியதோடு, செய்யும் காரியங்களை திட்டமிட்டு ஒழுங்குபடுத்திச் செய்வதற்கும் இளையோர் பழகிக் கொள்வது அவசியமாகும்.

"அதிகாலையிலேயே துயிலெழுந்து அன்று செய்யவேண்டிய காரியத்தைச் சிந்தனைசெய்து; காரியத்தை ஆராய்ந்து திட்டமிட்டுத் தந்தை, தாயைத் தொழுது ஆசிபெற்றுத் தொடங்க வேண்டுமெனக் கூறப்படுகிறது (ஆசார :3) இச்செய்கைகள் எதிர்காலத்தில் ஆரோக்கியமுள்ள பூரண மனிதராக ஒவ்வொரு இளையவரும் வளர்வதற்கான முன்னாயத்தங்களாக அமையுமென்பதில் ஐயமேயில்லை.

# பயிற்சியும் பக்குவமும்

ஒரு அமெரிக்க மாது, சுவாமி சிவானந்தரை அணுகி "தங்களைப் பெரிய யோகி என்று கூறுகிறார்களே பகவானை ஐந்து நிமிடங்களுக்குள் காட்ட முடியுமா?" என்று கேட்டாராம்.

"நிச்சயமாக முடியம்." என்று சிரித்த படியே கூறிய சுவாமிகள் அதற்குரிய குருதட்சணைகள் வேண்டும் என்றாராம்.

"எவ்வளவு?"

"நீங்கள் ஒரு சிறந்த மருத்துவராமே !"

"ஆமாம் !"

"எங்கள் ஆசிரமத்து மருத்துவமனையில் மலேரியாவால் பீடிக்கப்பட்ட ஒரு நோயாளி இருக்கிறார். அவரைக் குணப்படுத்தி ஐந்து நிமிஷங்களில் என்முன் கொண்டுவந்து நிறுத்தினால் நானும் ஐந்தே நிமிஷங்களில் பகவானைக் காட்டுகிறேன் !"

"அதெப்படி முடியும்?"

"அதுபோலத்தான் இதுவும். ஒரு சாதாரண நோயைப் போக்கிக் குணமடையச் செய்ய எத்தனை பயிற்சியும் பக்குவமம் தேவைப்படுகின்றனவோ, அத்தனை பயிற்சியும் பக்குவமும் ஏற்பட்டால் உள்ளத்துப் பிணிக்ள நீங்கும். ஆணவம் அழியும். மனத்தூய்மை ஏற்பட்டதும் இறைவனது தரிசனமும் கிட்டும் !" என்றார் ஸ்வாமி சிவானந்தர்.

# சமயம் என்னும் வாழ்க்கை நெறி

கனகசாந்தி, தம்பிலுவில்.

மதம், திருநெறி, தர்மம், மார்க்கம் எனப் பல்வேறு வகையில் உணர்த்தப்படுகிறது. ஒரு மனிதன் பிறந்து பெயர் வைப்பது முதல், இறந்து ஈமக்கிரியைகள் வரை அவனது சமயத்தோடு ஒட்டிய நிகழ்வுகளும், கிரியைகளுமே இடம் பெறுகின்றன. இவ்வகையில்தான் சமயம் என்பது வாழ்க்கை நெறியாகும். ஏனெனில் வாழ்க்கை நெறி என்பது சமயத்தோடு ஒட்டி வாழ்வதேயாகும். எனவே ஒருவனது ஆளுமை சிறந்ததாக அமைய வேண்டுமாயின் அந்த ஆளுமைக்கு முன் மாதிரியான முக்கியமானதோர் இலட்சியப் பொருள் இருத்தல் வேண்டும். அந்த இலட்சியப் பொருளே சமய நெறியோடு ஒட்டிய வாழ்வை அமைத்துக் கொள்வதெனப்படும். ஒருவன் கடைப்பிடிக்கும் இலட்சியத்தைப் பொறுத்தே அவனது வாழ்க்கை முறை அமைகின்றது. இந்த முறையே அவனது மனிதப் பண்புகள் வளர்ச்சியடைய உரமாக உதவுகிறது. அவ்வாறான மனிதப் பண்புகளைப் பெற்ற மனிதன் புனிதமாக வாழ்வதற்கு வழிவகுப்பதே சமயம் எனப்படும்.

சமயி என்று நாம் ஒருவரைக் குறிப்பிடும் போது அவரை நாம் புனித ஒழுக்கம் உடைய ஒருவர் என்றே கருதுகின்றோம். எனவேதான், இதற்குச் சான்றாக, ஒழுக்கத்தை இழந்தவன் தன் சமயத்தையும் இழக்கிறான் எனும் ஆங்கிலப் பழமொழி சான்று பகர்கிறது. சமயமானது ஒரு மனிதனுக்கு கவசம் போன்றது. அந்தக் கவசத்தை அணிந்து வாழும் மனிதன் தானும் பாதுகாக்கப்பட்டு, பிறரையும் பாதுகாக்கிறான். சமயநெறி நின்று வாழும் ஒரு மனிதனின் அன்பு, கருணை, காருண்யம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, இரக்கம், பரோபகாரம், அறம் செய்தல், இறைபணி நிற்றல் போன்ற ஆளுமைப் பண்புகள் முதிர்ச்சி பெறுகிறது. இந்த முதிர்ச்சிகளின் போது அவன் பிறந்ததுமுதல் இறக்கும் வரை தனக்கும் பிறருக்கும் உரிய சேவைகளை இல் வாழ்வின் துணையோடு அமைத்துக் கொள்கிறான். அந்த இல் வாழ்க்கையின் போது தான் தன் மனைவி, மக்கள், சமுதாயம் எனப்படிப்படியாக தனது பண்புகளைக் கொண்டு சமயத்தோடு ஒட்டியே வாழ்வை நடத்தி வருகிறான். இதற்காகவே அவனுக்கு அவனது சமய ஒழுக்க நெறிகள் வரையறுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

கொடுக்கிறவன் ஏற்பவனை விட சிறந்தவன். கடவுளுக்கு உன்னைக் கொடுத்துவிடு அப்பொழுது அவர் உனக்கு கடமைப்பட்டவர் ஆகிவிடுகிறார்

# சந்தேகமும் தெளிவும்

தமிழ்நாடு, கோயம்புத்தூர், சின்மயா சர்வதேச பள்ளியைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஸமாஹித சைதன்யா இலங்கை வந்திருந்த போது 'கோபுரம்' இதழுக்கென வழங்கிய பேட்டி சந்தேகமும் தெளிவுமாக இங்கே தரப்படுகின்றது.

ஆன்மீகத்தின் நோக்கம் என்ன?

தெளிவு :- மனதை வலிமைப்படுத்தி உயர்ந்த பணிகளில் ஈடுபடச்செய்வதே ஆன்மீகத்தின் நோக்கமாகும். மனம் அமைதியாக இருந்தால் உலகமும் அமைதியாகவே தென்படும். நல்ல சிந்தனைகளால் மனிதர்கள் மாறும்போது உலகமே மாறிவிடுகின்றது. மனதைப் பொறுத்தே வாழ்க்கை அமைகிறது. மனநிலை மாறும்போது சூழலும் மாறிவிடுகிறது. எனவே ஆன்மீகத்தின் நோக்கமே மனிதர்களை மேன்மைப்படுத்துவது தான்.

வாழ்வின் நிலையை மாற்ற முடியுமா?

தெளிவு :- நமது கர்மங்கள் எப்படியாக இருப்பினும், சிந்தனை, செயற்திறன் என்பவற்றால் வாழ்வை மாற்றலாம். நமது மனதிற் தோன்றும் எண்ணங்களுக்கேற்ப சூழலில் நன்மை தீமையை நாமே உண்டுபண்ணுகின்றோம். நமக்கென விதிக்கப்பட்ட கடமைகளை சரிவரச் செய்வதும், மாற்ற முடியாதவற்றை ஏற்றுக்கொள்வதுமே நாம் செய்யத்தக்க காரியங்கள்.

அறிவிற்கும் ஆன்மீகத்திற்கும் என்ன தொடர்பு?

தெளிவு :- அறிவு தர்க்கரீதியாக ஆராய்வது; ஆன்மீகத்திற்கு அநுபவம் தேவை. சுலோகங்கள் தெரியாத, பயிற்சிகள் இல்லாத பாமரர்கள் கூட நம்பிக்கையின் மூலம் அரிய காரியங்களைச் சாதிக்கலாம். கரும்பைப்பற்றி நிறையப் பேசுவது என்பது அறிவு. கரும்பின் சுவையை உணர்வது என்பது அநுபவம்.

ஆசைகளை நிறைவேற்றுவது எவ்வாறு?

தெளிவு :- ஆசைகள் தீயவையாக இருக்கக் கூடாது, நேர்மையானவையாகவும், நியாயமானவையாகவும் இருக்கவேண்டும் அவற்றை அடையவேண்டும் என்ற மனஉறுதி இருக்கவேண்டும். நிறைவேற்றும் வழிகளைக் கண்டுபிடிப்பதும், சக்தியைப் பெற்றுக் கொள்வதும் மிகவும் அவசியம். ஆயிரம் மைல்களைக் கடப்பது நமது ஆசையாக இருக்கலாம். ஆனால் அதற்கும் ஒவ்வொரு அடியாகவே முயற்சி செய்ய வேண்டும். எனவே நமது குறிக்கோளை அடைவது என்பது தொடர்முயற்சி; மரதன் ஓட்டம் போல. எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனின் அருளும் கிடைக்க வேண்டும்.

நவீன உலகின் முன்னேற்றங்கள் பற்றி?

தெளிவு :- உலகம் தொழில்நுட்ப விஞ்ஞான அறிவினால் மிகவும் முன்னேறிவிட்டது. எங்குபார்த்தாலும் கம்பியூட்டர்கள், தகவல் சாதனங்கள், மிகுந்துவிட்டன. ஆயினும், மனிதர்கள் அமைதி பெற்றுள்ளார்களா என்பது சிந்தனைக்குரியது. மனிதனே கண்டுபிடித்த கருவிகளால் இன்று மனிதனே துன்பப்படும் நிலைமை. கருவிகளைக் கண்டுபிடிப்பதும் இயக்குவதும் புற விடயங்கள். ஆனால் மனம் பண்படாத போது, ஆன்மீக வலிமை பெறாதபோது. தீமையே மிஞ்சும். எனவே விஞ்ஞான தொழில் நுட்ப அறிவினைக்கூட மனித மேம்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கு சமநிலையான மனம் அவசியமானது.

நமது சூழலில் ஏன் இத்தனை பிரச்சினைகள்?

தெளிவு :- பிரச்சினைகள் இன்றுமட்டும் இல்லை. மனிதன் தோன்றிய நாள்முதல் பிரச்சினை இருக்கின்றன. தீமையும், தீயவர்களும் எந்தக் காலத்திலும் இருந்த விடயங்கள், தருமனும், இராமனும் இருந்த காலங்களில்தான் துரியோதனனும், இராவணனும் வாழ்ந்தனர்.

கவலைப்படுவதால் நமது பிரச்சனைகள் தீர்ந்துவிடுவதில்லை, விட்டுக் கொடுத்தல் அன்புசெய்தல், நம்மைப் போலவே பிறரையும் நினைத்தல் போன்ற நற்குணங்களாலேயே அமைதி நிலவும். குரோதத்தால், தீமையே விளையும். இவை எந்தச் சமுகத்திற்கும், எந்த நாட்டுக்கும் எந்தக்,காலத்திற்கும் பொருந்துவன.

1998 ஆனி இதழின் அட்டையில் எமது இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் இராஜகோபுரம் படத்தை வெளியிட்டமைக்காக இறக்குவானை வாழ் இந்துக்களும் ஆலய பரிபாலன சபையினரும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கோபுரத்தின் பணிதொடர்வதாக.

கோ. பெருமாள் தலைவர், ஆலய
பரிபாலன சபை, இறக்குவானை.

கோபுரம் இதழால் நானும் எனது குடும்பத்தினரும் நண்பர்களும், பயனடைகின்றோம்.

இ. இராசையா. பஸல்ஸ் லேன்,
கொழும்பு -6

மாணவர்களாகிய நாம் 'ஆனி' கோபுரம் இதழால் மிகவும் பயன் பெற்றோம். உங்கள் பணி தொடர்க.

சந்திரகாந்த் ராமரெட்டியார்,
[illegible]ங்கா கொட்டுவ தலாத்துஓய.

# வாசகர் பார்வையில் கோபுரம்

கோபுரம் 'ஆனி' இதழை வாசித்தேன். எனது கண்கள் தாமாகவே அழத்தொடங்கின. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் அரிய தொண்டு வீண்போகவில்லை என எண்ணினேன். திணைக்களத்தில் பணிபுரிவோர் இதயசுத்தியுடன் ஆற்றும் பணிகள் கைகூடிவர இறைவனை வழுத்துகின்றேன். எல்லா மாவட்டங்களிலும் நீங்கள் ஆற்றும் பணிகள் பாராட்டிற்குரியன.

புலவர். வை.க. சிற்றம்பலம்
இணுவில், சுன்னாகம்

கோபுரத்தை வாசித்து மகிழ்ந்தேன். மாணவனான எனக்கு மிகவும் பயன்மிக்க விடயங்கள், உள்ளன.

பா. சிவகுமார். மகிழூர்முனை,
களுவாஞ்சிக்குடி.

'நேரமில்லை', 'ஏழாவது ஜாடி', 'வாழ்ந்துபார்க்கலாம் வாருங்கள்' போன்ற கட்டுரைகள் கடந்த இதழில் மிகவும் பயனுள்ளவை. இளையவர்களைச் சிந்திக்கச் செய்வன.

பாமா மெய்யநாதன், முறுத்தலாவ.

ஆனி கோபுரம் இதழில் நல்ல பல அம்சங்கள் அமைந்துள்ளன. இன்னும் சிறப்பாக வெளிவர இறைவனை வேண்டுகின்றேன்.

எஸ்.வி. வினோகாந்தன்
பார்ம் ரோட், கொழும்பு 15.

ஆனி 98 கோபுரம் மாணவர்களுக்கு மிகவும் பயனுடையது. எனது நல்வாழ்த்துக்கள்.

அ. அச்சுதன் சேனையூர்-6, மூதூர்.

கோபுரம் ஆனி 98 இதழ் கண்டேன். பணிவுநோக்கி 'தகவல் இதழ்' எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். பயன்மிக்க சிறுகட்டுரைகள் நிறைய உள்ளன. இயன்றளவு சிறப்பான பணிகளைச் செய்து வருகிறீர்கள். தங்கள் பணி மேலும் சிறப்பதாக. எல்லாம் திருவருள் இருந்தபடி.

ஆ. குணநாயகம்
டபிள்யூ.ஏ. சில்வா மாவத்த, கொழும்பு -6

நான் இந்துசமயம் பயிற்றப்பட்ட ஆசிரியை. ஆனி கோபுரத்தில் சிறந்த கட்டுரைகள் அமைந்திருந்தன. கோபுரம் போன்ற ஆன்மீக இதழ்களின் மூலம் நிறையப் பணிகளை ஆற்றமுடியும் என்பது எனது கணிப்பு.

கனகரட்னம் சாந்தி
மத்திய மகா வித்தியாலயம்,
தம்பிலுவில்-01.

ஆனி 98 கோபுரம் இதழில் திணைக்களத்தின் தகவல்கள், புகைப்படங்கள், மாவட்டக்கருத்தரங்குகள் என பலவிடயங்களையும் வாசித்தேன். சிறிய பயனுள்ள கட்டுரைகள் உள்ளன. எனது பாராட்டுகள்.

க. மாணிக்கவாசகர்.
கன்னன்குடா, மட்டக்களப்பு.

'ஆனி' கோபுரம் கிடைத்தது. அரிய பல விடயங்களைக் கொண்ட கட்டுரைகள் அமைந்துள்ளன. கோபுரம் மேலும் உயர்வடையப் பிரார்த்திக்கின்றேன்.

பாலா சங்குப்பிள்ளை
டன்பார் வீதி, ஹட்டன்.

ஆனி 98 கோபுரம் கிடைத்தது. எனது தள்ளாத வயதில் பல இடங்களுக்கும் சென்று சொற்பொழிவுகளைக் கேட்க முடியவில்லை. கோபுரம் எனக்கு குறைதீர உதவுகிறது. பலன்தரும் கட்டுரைகள் அமைந்திருந்தன. எனது இதழை கொழும்பு தமிழ்ச்சங்க நூலகத்திற்க கொடுத்துவிடுகிறேன். யான் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்.

சி. கந்தசாமி ஜே.பி.
மனிங் பிளேஸ், கொழும்பு-6.

தற்செயலாக கோபுரம் இதழ் வாசிக்கக் கிடைத்தது. நான் வேறு மதத்தைச் சேர்ந்தவன். எனினும் நடுநிலையுடன் சமயக் கருத்துக்களை அறிய இந்த இதழ் உதவியது. கோபுரம் இதழை இந்த 'முஸ்லீம்' சகோதரன் வாசிக்க ஆவலாக உள்ளேன். உதவுவீர்களா?

ஏ.எம். நஸீர்
மேல்நீதிமன்றம், வவுனியா.

---

சோம்பேறித் தனத்தை எந்த வழியிலும் துரத்தியாகவேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள். எல்லாத் தீமைகளையும் எதிர்த்து போரிடு. எண்ணத்தில் ஏற்படும் தீமைகள், செயலில் ஏற்படும் தீமைகள் முதலிய எல்லா தீமைகளோடும் போரிட்டுக்கொண்டேயிரு. இப்படி எதிர்ப்பதில் நீ வெற்றிபெற்ற பிறகு தான் அமைதி உன்னைத் தேடி வரும்.

இன்னல் இடுக்கண்களைக் கண்டு அஞ்சாமல் நாம் எதிர்த்தால் குரங்குக் கூட்டம் போல் அவை ஓடிவிடும். கோழைகள் ஒருபோதும் வெற்றியடைய முடியாது. இன்னல், அறியாமை, அச்சம் முதலியன நம்மை விட்டு ஓட வேண்டுமானால் அவற்றை எதிர்த்து போராடவேண்டும்.

அவ்வப்போது உலகத்திடம் இருந்து உங்களுக்குப் பலமான அடி கிடைக்கலாம். அதற்காக மனம் தளர்ந்து விட வேண்டாம். கணநேரத்தில் எல்லாம் சரியாகி விடும்.

- சுவாமி விவேகானந்தர்

# அங்கும் இங்கும்

## சம்பூரில் வாணிவிழா

சம்பூர், அம்பாள் அறநெறிப்பாடசாலையில், செப்டெம்பர் 27ம் திகதி, பாடசாலை மண்டபத்தில் வாணிவிழா சிறப்பாக இடம்பெற்றது. ஆலய சபைத்தலைவர் திரு. வ. மாணிக்கராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சம்பூர், ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலய குருக்கள் சிவஸ்ரீ க.கு. சீதாராம் குருக்கள் ஆசியுரை வழங்கினர். பலரது சொற்பொழிவுகளும், ஆசிரியை, மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெற்றன.

*(தகவல் — வ. சித்திரவேலாயுதம் — செயலாளர் — அம்பாள் அறநெறிப்பாடசாலை)*

## களுத்துறை ஆலய புனருத்தாபனம்

களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் புனருத்தாபனத்திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. தற்போது புதிய நிர்வாக சபை நியமிக்கப்பட்டுள்ளது. நிரந்தரமாக ஒரு குருக்கள் பூஜைகாரியங்களை மேற்கொண்டுள்ளார். தென்னிலங்கையின் வாயிலில் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம், 16 ஆண்டுகளுக்குப் பின்னர், அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. ஆலய வளர்ச்சிக்காக அனைவரது ஆதரவையும் நிர்வாக சபையினர் நாடி நிற்கின்றனர்.

*(தகவல் — ஆ. சுகேந்திரன், களுத்துறை)*

## ஞானவாணி அறநெறிப்பாடசாலை கஹவத்தை

கஹவத்தை, ஹவுப்பை தோட்ட ஞானவாணி அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்காக கட்டுரை, பேச்சு, மனனம், பண்ணிசை, கோலம், மாலை கட்டல் ஆகிய போட்டிகள் நடைபெற்றுள்ளன. பாலர் பிரிவு கீழ்ப்பிரிவுகளில் இவை நடாத்தப்பட்டன. அரையாண்டு, இறுதியாண்டு ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் விரைவில் நடாத்தப்படவுள்ளது.

*தகவல் — எஸ்.என். பாஸ்கரராவ் (ஞானவாணி அறநெறிப்பாடசாலை)*

## கருங்காலிச் சோலை முருகன் ஆலயம்

புத்தளம் முந்தல் கருங்காலிச்சோலையில் அமைந்துள்ள கல்யாணமுருகன் ஆலயம், சிறப்பான முறையில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. 1980ம் ஆண்டு ஆகம முறைப்படி கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1995ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம், கடும்புயல் என்பவற்றால், ஆலயம் சேதமடைந்தது. தற்போது நடைபெற்றுவரும் திருப்பணி வேலைகளுக்காக உதவிகளும், அன்பளிப்புகளும் கோரப்படுகின்றன.

*(தகவல் — டி.எம்.ஏ. ஆவுடையப்பன் உதவித்தலைவர், திருப்பணிச்சபை)*

## இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன ஆலய மலர் வெளியீடு

இறக்குவானை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய மகாகும்பாபிஷேக மலர் வெளியீட்டுவிழா சித்திரை மாதம் 15ம் திகதி பரியோவான் த.ம. வித்தியாலய மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. இரத்தினபுரி மாவட்டப் பொதுமக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில், இந்தியா கன்னியாகுமரி, வெள்ளிமலை, விவேகானந்த ஆசிரமத்தைச் சேர்ந்த சுவாமி சைதன்யானந்தாஜி மஹராஜ் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

## நாவல் நகரில் அறநெறிப் பாடசாலைக்கட்டிடம்

நாவலப்பிட்டி ஸ்ரீமுத்துமாரியம்மன், தேவஸ்தானத்தில் தமிழ்க்கலாசார மண்டபத்தின் ஒரு பகுதியில், அறநெறிப்பாடசாலைக் கட்டிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியுதவியை கால்நடை அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*(தகவல் — கே. பொன்னுத்துரை செயலாளர் — ஆலய பரிபாலனசபை)*

# நீதிமாலா

(வடமொழியிலிருந்து தமிழில்)

இரா. பாலகிருஷ்ண
ஐயர், நாரங்கல,
ஹாலிஎல.

☛ கல்வித்தன்மையும் அரசோச்சும் தன்மையும் என்றுமே சமமாயிருப்பதில்லை. எப்படியெனில் அரசன் தன் தேசத்தில் பூசிக்கப்படுகிறான். கல்விமானோ எங்கும் பூசிக்கப்படுகிறான்.

☛ பிறதேசத்தில் கல்வி பொருளாகும். துக்கம் வரும் காலங்களில் புத்தி பொருளாகும். ஒழுக்கமுடைமையோ எங்கும் பொருளாகும். பரலோகத்தில், தான் செய்த தருமம் பொருளாகும்.

☛ நற்குணமுள்ள ஒருமகன் குடும்பத்திற்கு நன்மை தரும். துட்டகுணமுள்ள நூறு புத்திரர் இருந்தும் பயனில்லை. எப்படியெனில் விண்ணில் உள்ள ஒரு சந்திரனே இருளைப் போக்குகிறது. பல நட்சத்திரங்களின் கூட்டத்தினால் அல்ல அதுபோல என்பதாம்.

☛ விவாதத்தின்போது பெண்ணானவள் அழகை விரும்புகிறாள். தாயோ பொருளை விரும்புகிறாள். தந்தையோ அறிவை விரும்புகிறார். இனத்தவரோ குலத்தை விரும்புவர். இதர ஜனங்களோ இனிய உணவை விரும்ப வர் என்பதாம்.

☛ சமுத்திரங்களில் மழை பெய்தல் வீணாகும். திருப்தியாக உண்டபின் உணவு உண்பது வீண். பணக்காரனுக்கு தானம் செய்தல் வீண். பகலில் விளக்கேற்றுதல் வீண்.

☛ மனிதனுக்கு அழகு ஆபரணம். அழகுக்கு ஆபரணம் குணம். குணத்துக்கு ஆபரணம் ஞானம். ஞானத்துக்கு ஆபரணம் பொறுமை என்பதாம்.

☛ விபத்துக்களின் முன்பாகவே செய்யவேண்டிய காரியங்களை சிந்தித்து செய்ய வேண்டும் அல்லவா. வீட்டில் நெருப்பானது நன்கு எரிந்து அழித்து விட்டபின் கிணற்றைத் தோண்டுவது உசிதமல்ல. எனவே செய்ய வேண்டியவற்றை நேர காலத்தில் செய்ய வேண்டும்.

☛ அன்னியன் ஆனாலும் நன்மை செய்பவன் இனத்தவன் (உறவினன்) ஆவான். உறவினன் ஆனாலும் நன்மை செய்யாதவன் அன்னியன் ஆவான். எப்படியெனில் தன்னுடனேயே இருக்கும் உடலில் உண்டாகிய நோய் எங்கோ காட்டில் உள்ள மருந்தினால் சுகம் அடைகிறதோ அதுபோல.

☛ நிழல்களைப் பிறருக்குக் கொடுத்து மரங்கள் தாம் வெயிலில் நிற்கின்றன. பழங்களையும் தாமுண்ணாமல் பிறருக்கே கொடுக்கின்றன. எனவே மரங்கள் உலகில் நல்ல மனிதர்கள்போல அவை வாழ்கின்றன.

☛ மனதினால் நினைக்கப்பட்ட காரியத்தை சொல்லினால் வெளிக்காட்டக்கூடாது. அதைச் செயலில் காட்ட வேண்டும். அதுபோல் அன்னியரை எதிர்பார்த்து நடக்கும் காரியம் என்றுமே சித்திப்பதில்லை என்பதாம்.

☛ எது நடக்க இயலாதோ அது அவ்விதமே இருக்கும். எது நடக்குமோ அது நடக்கும். வண்டியானது நீரில் போகாது அதுபோல் படகானது பூமியில் போகாது. எது எது எப்படி நடக்குமோ அவை மாறி நடவாது என்பதாம்.

☛ பூக்களில் சண்பகமும் நகரங்களில் இலங்கையும் நதிகளில் கங்கையும், அரசர்களில் ராமனும், அழகிகளில் ரம்பையும், புருஷர்களில் விஷ்ணுவும் காவியங்களில் மாகமும் (சிசுபாலவதம்) கவிகளில் காளிதாசனும் சிறந்தவை யென்பதாம்.

☛ பாம்பிற்குப் பல்லிலும், வண்டுக்கு கொடுக்கிலும், தேளுக்கு வாலிலும், துட்டனுக்கு எல்லா அங்கங்களிலும் விஷம் உண்டு.

☛ மலைதோறும் மாணிக்கம் இருக்க மாட்டாது. எல்லா யானைகளிலும் ரத்னம் இருப்பதில்லை. நல்ல மக்கள் எங்குமிருப்பதில்லை. காடுகளில் எல்லாம் சந்தன மரமுமிருப்பதில்லை.

ஹாலிஎல, நாரங்கல, ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவில் பிரதமகுரு இரா. பாலகிருஷ்ண ஐயர், இந்தியா, சிதம்பரம் மெய்யப்ப செட்டியார் சமஸ்கிருத கலாசாலையில் ஐந்து ஆண்டுகள் சமஸ்கிருதம் பயின்றவர். 'நீதி மாலா' என்ற சமஸ்கிருத நூலின் சில சுலோகங்களை அவர் மொழி பெயர்த்து 'கோபுரம்' இதழுக்கென வழங்கியுள்ளார்.

# சைவாலயங்களும், தேவாரங்களும்


*சி. குமாரசாமி எம்.ஏ.*

*தேவாரப்பண்ணிசை மன்றம், கொழும்பு.*


தமிழக வரலாற்றில் இராஜராஜசோழ மன்னன் காலத்துக்கு முன்னும் பின்னரும் தேவாரத் திருமுறைகள் சைவலாயங்களிலே ஓதப்பட்டு வந்துள்ளன. ஆனால் சோழ மன்னன் காலத்திலேயே அரச கட்டளை ஆக்கப்பட்டு ஓதுவார்களுக்கு சன்மானமும் மரியாதையும் வழங்கப்பட்டன.

தேவாரங்களுக்குப் பண்கள் உண்டு. அவற்றைப் பின்பற்றியே தேவாரங்கள் ஓதப்பட வேண்டும். வடமொழியும் தென்தமிழும் சைவத்தின் இரு கண்கள் என்றும், தேவாரங்கள் தமிழ் வேதம் என்றும் பேசப்படுவது வரவேற்கத் தக்கதே.

நித்திய நைமித்திய பூசைகளின் போதும் திருவிழாக்களின் போதும் வேதம் ஓதப்பட்ட பின்னர் தேவாரத் திருமுறைகள் ஓதப்பட்டு அதன் பின்னரே ஆசிர்வாதம் நடைபெறுதல் முறையாகும்.

தேவாரத் திருமுறைகளை ஓதுவோர் ஆசார சீலராய், சைவ உணவு உண்பவராய். சமய தீட்சை பெற்றவராய், பண்முறை தெரிந்தவராய் இருத்தல் அவசியம். யாரும் பாடலாம் எப்படியும் பாடலாம் என்ற முறை தவிர்க்கப்படல் வேண்டும். ஆலயத்தின் வருமானத்தில் ஒரு சிறு தொகையை ஓதுவாருக்கு சன்மானமாக உதவுவதும் சிறந்தது.

கும்பாபிஷேகத்தின் போதும் ஓதுவார்களின் பணி தேவைப்படுகிறது. யாகசாலையில் கும்பங்கள் வைத்த நாளில் இருந்து தினமும் திருமுறைகளிலுள்ள தேவாரங்களை ஓதுவார்கள் ஓதி வருதல் அவசியமாகும். கும்பாபிஷேகத்திலும் பின்னர் மண்டல அபிஷேகம் வரையும் ஓதுவார்கள் இப்பணியைச் செய்வதற்கு ஆலய நிர்வாகம் வழி செய்தல் வேண்டும்.

மேலும் கொடியேற்றம், கொடியிறக்கம் ஆகிய முக்கிய விழாக்களில் கொடித்தம்பத்தின் பக்கதில் நான்கு பண்கள் பாடப்படுதல் வேண்டும். அவையாவன : தக்கராகம், காந்தார பஞ்சமம், நட்டபாடை, இந்தளம் ஆகியன.

பின்னர் பிரம்ம சந்தியில் மேகராகக் குறிஞ்சிப் பண்ணும், இந்திர சந்தியில் காந்தாரமும் அக்னி சந்தியில் கொல்லியும், யமன் சந்தியில் கௌசிகமும், நிருதியில் நட்டபாடையும் வருணசந்தியில் சீகாமரமும், வாயு சந்தியில் தக்கேசியும் குபேர சந்தியில் தக்கராகமும் ஈசானத்தில் சாளரமும் பாடப்பட வேண்டியன.

பண் தெரிந்தோர் தேவாரம் ஓதுதலே சிறந்தது. தமிழக ஆலயங்களில் ஓதுவார்கள் தேவாரம் பாட என நியமனம் பெற்றுள்ளனர். நமது ஆலயங்களிலும் சபையினர் இவ்விடயத்தில் கவனஞ் செலுத்துவது சிறந்தது. கொழும்பு, தேவாரப் பண்ணிசை மன்றம் இவ்விடயத்தில் உதவு செய்யக் காத்திருக்கின்றது.

### பணிவும் துறவும்

*உலகில் எத்தனையோ பெரிய பெரிய அதிகாரங்கள் பணிவினாலும் துறவினாலுமே கிடைத்திருக்கின்றன; பட்டம் பதவிகளினால் அல்ல. பணிவுணர்வு, அடக்கம், எளிய வாழ்வு இம்மூன்றும் வாழ்க்கையின் குறிக்கோளாகி விட்டால், ஆத்ம விழிப்புக்கு வழி சமையும். அதுவே பெற்றரிய பட்டமும் பதவியும் ஆகும்.*

**சுவாமி சின்மயானந்தா**

# தலையும் வாலும்

நேற்று நான் நடந்து போய்க் கொண்டிருந்தபோது வழியில் ஒரு பாம்பைக்கண்டேன். அது ஒரு புத்திசாலியான பாம்பு. யாருக்கும் தொந்தரவு கொடுக்காமல், தன் வழியே, ஒழுங்கான பாதையில் போய்க் கொண்டிருந்தது. புத்திசாலியான பாம்பு ஆயிற்றே! அதனால் அதன் வாலுக்கும் கொஞ்சம் ரோஷம் வந்து விட்டது. 'எதற்காக இந்தத் தலை முன்னால் போகவேண்டும்? அது காட்டுகிற வழியில் நான் பின்னால் போக வேண்டும்? இன்மேல் நான் முன்னால் போகப் போகிறேன், தலை வேண்டுமானால் பின்னால் தொடர்ந்து வரட்டுமே' என்று எண்ணிற்று. அப்படியே போகவும் தொடங்கியது.

வாலுக்கு இந்த நினைப்பு வந்தது தலைக்குத் தெரியவில்லை. அதுபாட்டுக்குத் தன் வழியே போய்க் கொண்டிருந்தது. தலை ஒரு பக்கமும் வால் ஒரு பக்கமுமாக இழுத்தன. வயிறு நடுவில் மாட்டிக் கொண்டது. அதற்கு வலி தாங்க முடியவில்லை. "ஐயோ! அப்பா!" என்று கதறி அழுதது.

தலை அதைக் கேட்டுக் திரும்பிப் பார்த்தது. வால் தன்னைத் தொடர்ந்து வராமல் வேறு திசையில் இழுப்பதைக் கண்டு கொண்டது. வாலைப் பார்த்து. "அப்பனே! இவ்வளவு நாளும் நீ நான் போகிற வழியில்தானே பின்னால் வந்து கொண்டிருந்தாய்! இப்போது ஏன் திடீரென்று நீ வேறு பக்கம் போகிறாய்?" என்று கேட்டது.

"நீ ஏன் வழி காட்ட வேண்டும்? நான் ஏன் பின்னால் வரவேண்டும்? எனக்கும் முன்னால் போகத்தெரியும். நான் போகத் தான் போகிறேன். நீ வேண்டுமானால் பின்னால் வாயேன்!" என்று பதில் சொல்லிற்று வால்.

"அப்பனே! எனக்கு முன்னால் பார்க்கக் கூடிய இரண்டு கண்கள் இருக்கின்றன. நல்ல வழியைச் சிந்தித்துப் பார்க்கக் கூடிய புத்தியும் இருக்கிறது. அதனால் நான் பார்த்துக் கொண்டே சரியான வழியில் முன்னால் போக முடியும். உனக்கு அந்த மாதிரி இல்லையே!" என்றது தலை.

"நீ சொல்ல வேண்டாம். கண்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. எனக்கு வழி தெரியும். நான் என் வழியே போகத்தான் போகிறேன்" என்று வால் பிடிவாதமாகப் போகத் தொடங்கிற்று.

வயிறு, "ஐயோ!" என்று அழுவதைத் தலை பார்த்தது. தலைக்கு சிந்திக்கக்கூடிய புத்தி இருந்தது. இருவரும் பிடிவாதம் பிடித்தால் ஆபத்து என்பதை உணர்ந்து கொண்டது.

"சரி, வால் போகிற வழியிலேயே விட்டு விடலாம்" என்று பேசாமல் வாலைத் தொடர்ந்து பின்னால் போகத் தொடங்கிற்று.

வாலுக்குக் கண் தெரியவில்லை. சிந்தனையும் இல்லை. வாலைப் புரட்டி பட்டுப்பட்டென்று அடித்துக் கொண்டது. கண்டபடி தாறுமாறான வழிகளில் அது போய்க் கொண்டிருந்தது. தலை ஒன்றும் செய்ய முடியவில்லை. தவிர அதன் கண்கள் முன்னால் அல்லவா இருந்தன? அதனால் வால் போகும் வழி சரியா, தப்பா என்று அதனால் திரும்பிப் பார்க்கவும் முடியவில்லை. ஆனால் அதன் முன்பார்வை தீர்க்கமாக இருந்தது. தான் விட்டு விட்டு வந்து கொண்டிருக்கும் அருமையான பொருட்கள், நல்ல சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே பரிதாபமாகத் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது.

கடைசியாய் அது ஒரு பாழுங்கிணற்றை நோக்கி வழுக்கிக்கொண்டேபோய்க் கொண்டிருந்ததை மட்டும் நான் பார்த்தேன்.

நான் என் வழியே போய் விட்டேன் அப்புறம் அதற்கு என்ன ஆயிற்றோ, எனக்குத் தெரியாது.!

# விநாயகர் தத்துவம்

நாம் எதை எழுதத் தொடங்கினாலும் முதலில் பிள்ளையார் சுழி போட்டு விட்டுத்தான் ஆரம்பிக்கிறோம். பெரிய காவியமாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை. ஒருவருக்கொருவர் எழுதுகின்ற கடிதத்திலும் இந்த முறையைப் பயன்படுத்துகிறோம். இதற்குக் காரணம் விக்னம் இல்லாமல் எந்தக் காரியமும் நடக்க வேண்டும் என்ற நம்பிக்கைதான்.


விநாயகர் எல்லோருக்கும் பிடித்தமானவர். விநாயகருக்கு எல்லோரையும் பிடிக்கும். கோயில்களுக்குள் சென்று பிராகாரங்களை எல்லாம் தாண்டித்தான் விநாயகரைத் தரிசிக்க வேண்டும் என்றில்லை. அவரை எங்கும். எப்பொழுதும் எந்த இடத்திலும் தரிசிக்கலாம். அந்த அளவுக்கு விநாயகர் அங்கங்கே அமர்ந்திருக்கிறார்.

விநாயகரை வழிபடுவதற்கென்று சில முறைகள் இருக்கின்றன. சிதறு தேங்காய்களைப் போடுவது; நெற்றியில் குட்டச் செய்வது; தோப்புக்கரணம் போடுவது ஆகியவை விநாயகரின் அனுக்கிரகத்தை நமக்கு வரவழைக்கும். விநாயகர் கேது சொரூபம். கேதுபோல் கொடுப்பவனும் இல்லை கெடுப்பவனும் இல்லை என்பது ஜோதிடப் பழமொழி. என்வே விநாயகரை வழிபட்டால், 'கேது' பகவானின் கொடுமையிலிருந்து தப்பலாம்.

விநாயகருக்கு, மஞ்சள் பொடியால் அபிஷேகம் செய்வதும், நல்லெண்ணெய் அபிஷேகம் செய்வதும் விபூதி அபிஷேகம் செய்வதும் பிடிக்கும். அதே போல் மோதகம், விளாம்பழம், வெல்லம், அருகம்புல் ஆகியவற்றை நைவேத்தியம் செய்தும் அவருடைய அனுக்கிரகத்தைப் பெறலாம்.

'ஓம்' என்பது பிரணவம். அந்த ஓம் என்பதைத் தனது உருவத்திலேயே உணர்த்துகிறார் விநாயகர். அவரது வாயின் வலது புறத்தில் தொடங்கி கன்னம், தலை இவற்றைச் சுற்றிக்கொண்டு இடது புறத்தில் தும்பிக்கை வழியாக இறங்கி அந்தத் தும்பிக்கையின் வளைந்த நுனிவரையில் வந்தால் அது ஓம் என்பதுபோல் இருக்கும்.

'ஓம்' என்ற பிரணவத்தை அஉம என்ற மூன்றும் சேர்ந்து உருவாக்குகிறது. இதில் 'அ' என்பது பிரம்மா, அதாவது சிருஷ்டி, 'உ' என்பது விஷ்ணு. வளர்ப்பது – காப்பது என்ற பரிபாலனம். 'ம' என்பது ஈஸ்வரன். அதாவது சம்ஹாரம். எனவே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலைச் செய்கின்ற பிரம்மா – விஷ்ணு – சிவன் ஆகிய மூன்று கடவுள்களின் அம்சமாக விளங்குகிறவர் விநாயகர்.



விநாயகரை 'கணாளம்' என்று சொல்வதற்கும் காரணம் உண்டு. கான பத்யம், கௌமாரம்:சாக்தம் சைவம், வைஷ்ணவம் ஸௌரம் – என்கின்ற இந்த ஆறும் அறுவகை வழிபாட்டைக் குறிப்பனவாகும். இவற்றில் எல்லாவற்றிற்கும் முதலான காணபத்தியம் என்பது முழு முதற் கடவுள் தன்மை பொருந்திய தன்மை. எனவேதான் 'கணபதி' என்றும் விநாயகருக்குப் பெயர் உண்டு.

வடமொழியில் கண – என்பது மக்களைக் குறிக்கும். அந்த மக்களுக்குப் பதியாக (தலைவனாக) இருப்பவர் விநாயகர் என்றும் பொருள் கொண்டு அழைப்பதுண்டு. கணபதியை வேறு விதமாகவும் அழைக்கலாம் க-என்பது மனோபலம். மனோவாக்கு ண- என்பது எல்லாவற்றையும் கடந்த நிலை பதி- என்றால் தலைவர். எனவே எல்லாவற்றையும் கடந்து எவர் இருக்கிறார் என்றால் – அவர் விநாயகர்தான் என்ற பொருளும் உண்டு.

தேவகணங்களுக்குத் தலைவராக இருக்கும் விநாயகர், வினைகளுக்கெல்லாம் நாயகராகவும் இருப்பதால் விநாயகர் என்ற பெயரைப் பெற்றிருக்கிறார். 'சுழி' என்பது வளைவைக் குறிக்கும். விநாயகரின் தும்பிக்கையின் நுனியானது வளைந்து சுருண்டு காணப்படுவதால் பல இடங்களில் 'வக்ர துண்டர்' – என்ற பெயர் கொண்டு வணங்குவதுண்டு.

விநாயகரின் இடைக்குக் கீழே மனித ஸ்வரூபம், இடைக்கு மேலே கழுத்து வரையிலும் தேவ ஸ்வரூபம், கழுத்தின் மேலே யானைத் தலை இருப்பதால் மிருக ஸ்வரூபம் அதிலே ஒரு கொம்பு ஆண் கொம்பு மற்றொன்று பெண் கொம்பு. யானைத்தலை அஃறிணை; தெய்வ உடம்பு உயர்திணை. அவரது பெருவயிற்றுக்குள் இந்த உலகமே அடக்கம்.

விநாயகரின் நான்கு புஜங்களும் நான்குவித புருஷார்த்தங்களைக் குறிக்கும் படைத்தல் தொழிலைக் குறிக்க ஒரு கரத்தில் பாசம். தீமையை அழிக்கும் பொருட்டு ஒரு கரத்திலே அங்குசம், ஒரு கை, பகத்ர்களுக்கு அருள் பாலிக்கும். அபயக்கரம் கொடுத்து தனது பக்தர்களின் இன்னல்களைத் தடுத்துக் காப்பாற்ற – இன்னொரு கரம். ஐந்தாவது கரமான துதிக்கையானது மறைத்தல் தொழிலைப் புரிவது. வாயை அடக்கிப் பேச வேண்டும் என்பதால் வாயை மறைத்து அமர்ந்திருப்பது – இவை விநாயகரின் தத்துவங்களாகும்.

விநாயகருக்கு எத்தனையோ பெயர்கள் உண்டு. மூர்த்தங்கள் உண்டு. மொத்தம் ஐம்பத்தொரு மூர்த்தங்கள் உண்டு என்றாலும் அவற்றில் மிகவும் சிறப்பாக இருப்பவை முப்பத்திரண்டுதான். அவை பாலகணபதி, தருண கணபதி, பக்த கணபதி, வீரகணபதி, சக்தி கணபதி, விஜய கணபதி, ஸித்தி கணபதி, உச்சிஷ்ட கணபதி, விக்ந கணபதி, க்ஷிப்ர கணபதி, ஹேரம்ப கணபதி, லக்ஷ்மி கணபதி, மஹாகணபதி, விஜய கணபதி, நிருத்த கணபதி, ஊர்த்தவ கணபதி என்ற இந்த பதினாறு கணபதி வழிபாடுகளுக்கு ஷோடச கணபதி, வழிபாடு என்பது பெயர். இவற்றை யார் வழிபாடு செய்கிறார்களோ அவர்களுக்கு மூன்று பிறவிகளிலும் செய்த பாவங்கள் மறைந்து செல்வச் செழிப்போடு ஆரோக்கியமாக இருப்பார்கள்.

ஏகாட்சர கணபதி, வர கணபதி, த்ரியாக்ஷர கணபதி, ஹிப்ர பிரசாத கணபதி, ஹரித்ர கணபதி, ஏகதந்த கணபதி, சிருஷ்டி கணபதி, உத்தண்ட கணபதி, ரணமோக்ஷ கணபதி, சிங்க கணபதி, யோக கணபதி, துர்கா கணபதி, சங்கடஹர கணபதி, மும்முக கணபதி, துவிமுக கணபதி, ஆகிய ஒவ்வொரு கணபதியும் ஒவ்வொரு ரூபமாக இருப்பார். இந்த கணபதி இருக்கும் திருத்தலங்களைக் கண்டு ஒருவர் பிரார்த்தனை செய்து வந்தால் சகல விதமான ஐஸ்வர்யங்களையும், நோயற்ற தன்மையும், செல்வச் செழிப்பும் தடையின்றி ஏற்படும்.

மேற்படி முப்பத்திரண்டு விநாயகர்கள் பதித்த உருவத்தை நாம் பூசை அறையில் வைத்துப் பூஜித்தாலே அத்தனை திருத்தலங்களுக்கும் சென்று வந்த புண்ணியம் கிடைக்கும்.

இளையோர்க்காக

# சொல் சுத்தம்

ஒரு மனிதனுடைய பேச்சினின்றும் அவனுடைய பண்பையும் பயிற்சியையும் கண்டு கொண்டு விடலாம்.

கிராமமொன்றில் புதிய கோவில் ஒன்று கட்டிக்கொண்டிருந்தனர். கூலியாட்கள் சிலர் அதற்காகக் கல் உடைத்துக் கொண்டிருந்தனர்.

பெரியார் ஒருவர் அவ்வூருக்கு விஜயம் செய்தார். கோவில் வேலை நடக்கும் இடத்திற்குச் சென்று எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டு வந்தார். ஒரு கூலியாளை விளித்து, "நீ என்ன செய்கின்றாய்?" என்று வினவினார்.

"தெரியவில்லையா, கை நோகக் கல் உடைக்கிறேன்" என்றான் அவன். சிறிது தூரம் சென்று பெரியார் வேறொரு கூலியாளை அதே கேள்வியைக் கேட்டார்.

"ஐயா, வயிற்றுப் பிழைப்புக்காக ஓயாது உழைக்கின்றேன்" என்றான் அவன்.

இன்னமும் அப்பால் சென்று மூன்றாவது ஆள் ஒருவனை அதே கேள்வியைக் கேட்டார் பெரியார்.

"சாமி! ஏதோ கொஞ்சம் ஆலயப்பணி செய்கின்றேன். இடம் கடந்த இறைவனுக்கோர் இடம் கட்டும் இம்முயற்சியில் அடியேனுக்கொரு பங்கு கிடைத்தது" என்றான்.

மூவரும் கூலியாட்கள் தாம், ஆனால் தன் வேலையைப் பற்றி ஒவ்வொருவனும் ஒரு தனி மனப்பான்மையைக் கொண்டிருந்தான், முதல்வனுக்கு அத்தொழில் வேண்டாவெறுப்புடன் செய்யப்படவேண்டிய வேலையெனவே பட்டது. இரண்டாமவனுக்கு அது வயிற்றுப் பிழைப்புக்கொரு வழியென மட்டும் தோன்றிற்று. மூன்றாமவனும் கூலிக்காகத்தான் உழைத்தான். ஆனால் தன்தொழிலை அவன் இறைபணியாகக் கருதினான்.

*மா*ணவர் விடுதியொன்றில் உணவு மணி அடித்தது. அறைகள் பலவற்றில் அதுவரை அமைதியாகப் படித்துக் கொண்டிருந்த பையன்கள் இரைச்சலுடன் உணவுக் கூடத்திற்குச் செல்ல ஆயத்தமாயினர்.

"டேய், சோமு! இன்னமும் என்னடா படிப்பு. வயிற்றுக்குப் பிண்டம்போட எழுந்திரேன்" என்று ஒரு புறத்திலிருந்து குரல் எழுந்தது.

"சோறு கொட்டிக்கொள்ள வரவில்லையாடா?" என்று மற்றொரு புறத்திலிருந்து சத்தம் கிளம்பிற்று.

"பிரசாதம் அருந்திவிட்டு வருவோமே" என்று வேறோரு இடத்தினின்றும் பேச்சு வந்தது.

ஒரு மனிதன் விடும் ஏப்பத்தினின்றும் அவன் உட்கொண்ட உணவு எத்தகையது என்பதைக் கண்டுகொள்ளலாம். அதைப் போலவே ஒரு மனிதனுடைய வாக்கினின்றும் அவனது உள்ளப்பண்பை ஊகித்துக்கொள்ளலாம்.

பேசுவது ஒரு கலை. அது அழகுடையதாக அமையவேண்டும். வாக்குச் சுத்தம் இன்றியமையாதது. ஆபாசப் பேச்சு, தகாத சொற்கள் இவை வாயினின்றும் வெளிவரக் கூடாது. சிலர் தகாத சொற்களை அன்புச் சொற்களாக உபயோகித்துக் குழந்தைகளை அழைப்பதுண்டு. இதுவும் தவிர்க்கப்படவேண்டிய பழக்கமேயாகும். இலக்கியத்தில் நல்ல சொற்களுக்குக் குறையில்லை.

நல்ல வாக்குக்குச் சூழ்நிலை ஒரு பெரிய காரணமாக அமைகின்றது.

வழிப்போக்கன் ஒருவன் வெகுதூரம் நடந்து சென்ற பிறகு ஒரு மரத்தடியில் போய் நின்றான். "வாருங்கள், ஓய்வு கொள்ளுங்கள், நல்ல நீர் அருந்திதாகசாந்தி செய்துகொள்ளுங்கள், காயும் கனியும் புசித்துப் பசியைப் போக்கிக் கொள்ளுங்கள்" என்று ஒரு குரல் கேட்டது. வழிப்போக்கன் நிமிர்ந்து பார்த்தான். கிளி ஒன்று மரத்தின்மீது அமர்ந்து இவ்வாறு பேசியதைக் கேட்டான். மிக வியப்புற்றான்.

மீண்டும் வழிநடந்தான் வழிப்போக்கன். சிறிது நேரத்திற்குப் பிறகு வேறொரு மரத்தடியை அடைந்தான். "கட்டு, அடி, உதை, கொல்" என்று யாரோ கூறுவதைக் கேட்டு பயந்து மேலே நோக்கினான். கிளி ஒன்று இவ்வாறு பேசியதைக் கேட்டு திடுக்கிட்டான்.

பிறகு வழிப்போக்கன் காட்டிலிருந்த வேடர்களை கொண்டு மிகக் கஷ்டப்பட்டு ஆராய்ச்சிசெய்து கிளிகளின் பூர்வோத்தரங்களைக் கண்டுபிடித்தான். இரு கிளிகளுக்கு தாய் ஒன்றே. ஆயினும் ஒரு கிளி ரிஷி ஆசிரமமொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இளமையைக் கழித்து வந்தது. வேறொன்று கசாப்புக் கடையொன்றினில் சிறு வயதில் இருந்து வந்தது. பிறகு இரண்டும் தப்பியோடி வனத்தை வந்தடைந்தன.

பாலிய சகவாசமே பறவைகளின் தார தம்மியத்துக்குக் காரணம் என்பது புலனாயிற்று.

வாக்கின் மூலம் உயர்ந்த பண்பைக் காட்டுவது மாணவர் பெறவேண்டிய பயிற்சிகளுள் ஒன்றாகும்.

சத்யம் ப்ரூயாத், ப்ரியம், ப்ரூயாத் (உண்மை பேச வேண்டும், இனியதைப் பேசவேண்டும்) என்ற முதுமொழியை நினைவில் வைத்து ஒழுகினால் இந்தப் பயிற்சி எளிதாகும்.

இறைவனைப் பற்றிய உணர்வு வந்து விட்டால் வாசனைகள் வலுவிழந்து விடும். ஆனால் வாசனைகள் விலகினால் தான் இறைவனைப்பற்றிய உணர்வும் ஏற்படும். இது தொடர்ந்து வரும் ஒரு மாயைச் சுழற்சி. இதில் சிக்கிக் கொள்ளலாமல் மெல்ல மெல்ல விலகுவதே மனம் பக்குவப்படுவதற்கு உரிய வழியாகும். புலன்களை அடக்குவதைத் தெய்வீகமான சிந்தனைக்கும் அதையொட்டிய வழிமுறைகளுக்கும் உரியதாக கைகொள்ளுங்கள் அப்போது அந்த கட்டுப்பாடு நம்மை உயர்த்துவதை உணர முடியும்.

# ஆலயங்களில் நித்திய நைமித்திகக் கிரியைகள்

ஆலயங்களில் தினமும் நடைபெறும் நித்திய பூஜைகள் ஆலயங்களின் வசதிக்கேற்ப ஒருவேளைமுதல் பன்னிரு வேளைகள்வரை நிகழும். திருச்செந்தூர் முதலிய தமிழகக் கோயில்களில் பன்னிரு வேளைகள் பூஜை நிகழ்கிறது. எங்கள் நாட்டில் வசதிபடைத்த பல கோயில்களில் ஆறுகாலப் பூஜை நடைபெறுகிறது.

சூரியன் உதிப்பதற்குச் சுமார் ஒன்றரைமணி நேரத்திற்கு முன் நிகழவேண்டியது முதலாவது பூசை, இது உஷத்கால பூஜை எனப்படும். இரண்டாவதாக நிகழும் காலை சந்திப் பூஜை, சூரியன் உதித்து மூன்று மணித்தியாலங்களுக்குள் நிகழும். உச்சிக் காலப் பூஜை நடுப்பகலுக்குரியது. சூரியன் மறைவதற்கு ஒன்றரை மணி நேரத்துக்குமுன் நிகழ்வது சாயரட்சைப் பூஜை (சாயங்காலப்பூஜை) இதன் பின் நிகழும் ஐந்தாவது பூஜைக்கு இரண்டாங்காலப் பூஜை என்று பெயர். சாயங்காலப் பூஜையிலிருந்து ஒன்றரை மணித்தியாலத்தின் பின் நிகழ்வது இது. இரண்டாங்காலப் பூஜை நடந்து ஒன்றரை மணித்தியாலம்வரை அர்த்தயாமப்பூஜைக்குரிய காலமாகும்.

தொகுத்து நோக்கின், அதிகாலை நாலரை மணி, காலை எட்டுமணி, பகல் பன்னிரண்டு மணி, பிற்பகல் நாலரை மணி, மாலை ஆறு மணி, இரவு ஏழரைமணி ஆகியவை முறையே ஆறுகாலப் பூஜைகளுக்கும் உரிய நேரங்கள் எனலாம்.

இந்த ஆறு வேளைப் பூஜை நடைபெறும் வசதி இல்லாத இடங்களில் காலைச்சந்தி, உச்சிக்காலம், மாலை என மூன்று வேளை அல்லது காலை, மாலை என இரண்டு வேளைகள் பூஜை நடைபெறும். மிகவும் வசதி குறைந்த சிறிய ஆலயங்களில் ஒரு வேளைப் பூஜை நடைபெறுவதும் உண்டு.

அதிகாலையில் நீராடி நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துத் தூய ஆடைகளும் விபூதி ருத்திராக்ஷமும் தரித்தவராக அர்ச்சகர் ஆலயத்தை அடைவார். திருநந்தி தேவரையும் துவாரபாலகர்களையும் பிரார்த்தித்து அநுமதி பெற்று மண்டபத்தையடைந்து சகளீகரணம், பூதசுத்தி, அந்தர்யாகம் முதலியவற்றைச் செய்து பூஜைக்குத் தயாராகத் தம்மை ஆக்கியபின் வைரவரின் ஆலயம் சென்று வணங்கி முதல்நாளிரவு அவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த திறப்பினை அங்குச முத்திரையால் எடுத்துவந்து வாசலில் நின்று திருப்பள்ளி எழுச்சி முதலியன பாடித் துவார பூஜை நிகழ்த்திச் சிவசக்தி மந்திரத்தை உச்சரித்தபடி கதவைத் திறப்பார்.

உள்ளே துப்பரவு செய்து நிர்மால்யம் களைந்து (அர்ச்சித்த பூக்கள் மாலைகளை அகற்றி) பாத்தியம், அர்க்கியம், ஆசமநீயம் ஆகியவற்றைக் கொடுப்பர். இதன்பின் முதலில் விநாயகர் பின்பு மூலவர் (மூலஸ்தானத்திலுள்ள பிரதான மூர்த்தி) அதன்பின் சக்தி ஆகியோரின் பூஜைகள், அபிஷேகம் முதல்தோத்திரம் வரை நிகழும். ஏனைய பரிவார தேவர்களுக்கு இவ்வேளையில் பெரும்பாலும் பூஜை நிகழ்வதில்லை. இவ்வேளையில் நைவேத்தியமாகப் பாலையே பயன்படுத்துவது மரபு.

காலை சந்திப் பூஜையில் சூரியன் தனிச் சந்நிதானத்தில் இருந்தால் அவருக்கே முதற்பூஜை நிகழும். இதன்பின் விநாயகர். மூலவர், ஏனைய பரிவாரங்கள் யாவருக்கும் விரிவாக அபிஷேகம் முதல் தோத்திரம் வரை பூஜைகள் நடைபெறும்.

உச்சிக்காலப் பூஜைக்குமுன் அர்ச்சகர் ‘மத்யாஹ்நிகம்’ எனப்படும் உச்சிக்காலத்திற்குரிய தமது நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்தபின் விக்நேஸ்வர பூஜைமுதல் சிவோகம் பாவனை வரையிலான பூர்வாங்கக் கிரியைகளைச் செய்து ஸ்நபனகும்ப பூஜை செய்து பின்னர் அபிஷேக ஆராதனைகளை விரிவாக நிகழ்த்துதல் முறை. இதேபோல் ஏனைய மூன்று காலப் பூஜைகளுக்கும் நிகழும். இரவு அர்த்தயாமப்பூஜை நிறைவுற்றதும் ஆலயத் திறவுகோலை வைரவர் சந்நிதியில் வைத்துக் கோயிற்பாதுகாப்பை அவரிடம் ஒப்புவித்தல் வழக்கம்.

ஸ்நபன மண்டபத்திலே அமைக்கப்பட்டிருக்கும் ஓமகுண்டத்திலே தினமும் அக்கினி காரியம் செய்தல், நித்தியாக்கினி

காரியம் என்றும், ஆலய வீதியில் எட்டுத் திக்குகளிலும் அந்தந்தத் திக்குப்பாலகர்களான இந்திரன் முதல் ஈசானன் வரையானோர்க்கும் பத்ரலிங்கம் என்னும் பலிபீடத்திலே (கொடிமரத்திற்கருகிலுள்ளது) உரிய முறைப்படி அவ்வத் தேவர்களுக்கும் சாத உருண்டைகளைப் பலியாக வழங்கி மகிழ்வித்தல் நித்திய பலிதானம் என்றும் சொல்லப்படும்.

நித்தியோற்சவர் என்ற பெயருடன் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கும் உற்சவ மூர்த்தியைத் தினமும் ஒரு தரம் பூஜையின் முடிவில் வீதிவலம் வரச்செய்தல் நித்தியோற்சவம் எனப்படும். (இம்மூர்த்தி பெரும்பாலும் ஒருவர் அல்லது இருவர் தூக்கிச் செல்லத்தக்கதாக மிகச் சிறிதாக இருக்கும்).

இங்கு குறிப்பிட்ட நித்தியாக்கினி காரியம், நித்திய பலிதானம், நித்தியோற்சவம் என்பன வசதிபடைத்த சில கோயில்களில் மட்டுமே நிகழும். ஸ்நபனாபிஷேகம் போன்றவையும் அவ்விதமே.

ஆகம விதிப்படி அமையவேண்டிய பூஜைக்கிரமம் எது என்பதை பக்தர்கள் ஓரளவு அறியவேண்டியதன் அவசியம் கருதியே இவை இங்கு விபரிக்கப்பட்டன. ஆயின், சந்தர்ப்ப சூழ்நிலைகள், இடம், பொருள், ஏவல்களுக்கேற்பவும் கால மாறுதல்களை அநுசரித்தும் இன்று இவற்றின் மிகச் சுருங்கிய வடிவத்திலேயே நித்திய பூஜைக் கிரியைகளை நாம் காண வேண்டியுள்ளது.

எப்படியிருப்பினும் தினமும் ஒரு தடவையாவது குறைந்த பட்சம் குளிர்ந்த நன்னீரை மட்டுமாவது தாராளமாகப் பயன்படுத்தி அபிஷேகம் செய்தல் அவசியமாகும். தீபாராதனையில் எல்லாவகையான தீபங்களையும் தினமுங் காட்டுதல் இயலாததெனினும் ஒற்றைத் தீபம், கற்பூரதீபம், பஞ்சாராத்திரிகை ஆகியவற்றை நிதானமாக நிறுத்தி ஒழுங்காகக் காட்டுவதும், தாராளமாகப் பூவினால் அர்ச்சித்து இயன்ற அளவு நாமங்களைக் கூறிப் பூஜை நிகழ்த்துதலும் அவ்வாறே மிகவும் அவசியம்.

சுகந்ததூபம் இட்டு நைவேத்தியம் செய்தபின்னர் திரையை நீக்கித் தீபங்காட்டுதலும், அடுத்துக் கற்பூரதீபம் காட்டுதலும் அதையடுத்து அர்ச்சனையும் அதன் முடிவில் பஞ்சாராத்திரிகை அல்லது மீண்டும் ஒருமுறை கற்பூரதீபம் காட்டுவதும் மிகமிகக் குறைந்த அளவு கிரியையாகும். இவற்றையேனும் ஒழுங்காக நிறைவேற்ற முடியாத அல்லது விரும்பாத அர்ச்சகர்கள் ஆலயக் கிரியைகளில் பங்கேற்பது வருந்தத்தக்கதே!

### *நைமித்திகக் கிரியைகள் :*

நைமித்திகம் என்பது விசேஷ கிரியையாகும். சுக்கிரவாரம் (வெள்ளிக்கிழமை), சோமவாரம் (திங்கட்கிழமை) முதலிய வாரந்தோறும் வருகின்றவையும், பிரதோஷம் முதலிய இருவாரங்களுக் கொருமுறை வருபவையும், மாதப் பிறப்பு, கார்த்திகை, சதுர்த்தி, பூரணை முதலிய மாதமொருமுறை வருவனவும், நடேசரபிஷேகம் ஆகிய இரு மாதங்களுக்கொருமுறை வருபவையும், ஆடிப்பூரம், ஆவணிமூலம், கந்தசஷ்டி, நவராத்திரி ஆகிய வருஷமொருமுறை வருபவையும், கிரகணபூஜை, மகாமகம் போன்ற பல வருடங்களுக்கொருமுறை வருபவையுமென்று நைமித்திகக் கிரியைகள் பலவகைப்படும். பிரதிஷ்டை என்னும் கும்பாபிஷேகமும் நைமித்திகமே.

இவை குறிப்பிட்ட தினங்களில் அவ்வவற்றுக்குரிய மரபு முறைப்படி விசேஷ அபிஷேகம், பூஜை, விசேஷ அர்ச்சனை, உற்சவம் முதலிய அம்சங்களைக் கொண்டவையாக அமையும்.

### *காமியக் கிரியைகள் :*

ஏதாவது பிரத்தியேக நற்பலன்களை விரும்பி நாம் செய்கின்ற கிரியைகள் காமியக் கிரியைகளாகும். நமது குறிக்கோள் நிறைவேறவேண்டுமென்னும் எண்ணத்துடன் நித்திய நைமித்திகங்களைச் செய்வித்தலும், ருத்ராபிஷேகம், ஸநபனாபிஷேகம், சங்காபிஷேகம் போன்றவற்றைச் செய்வித்தலும் காமியக் கிரியைகள் எனக் கூறப்படும்.

பிரதிபலனை எதிர்பாராது நம்கடமை இதுவென எண்ணிக் கிரியைகளை நடத்துவதே சிறப்பு. எனினும், லௌகீக வாழ்வில் ஈடுபட்டுள்ள சாதாரண ஆன்மாக்களாகிய நாம் எமது ஆசைகள் பூர்த்தியடையும் பொருட்டு இக்கிரியைகளை நடத்துவித்தல் தவறல்ல. முறையாகவும் பக்தியுடனும் இவற்றை நடத்தி, அதன் பெறுபேறுகள் யாவும் சிவார்ப்பணமேயென்றெண்ணிச் சமர்ப்பித்தல் உயர்ந்த பக்குவ நிலைக்கு நம்மை வளர்க்கும்.

*(கோப்பாய்-சிவம் எழுதிய 'சைவாலயக் கிரியைகள்' எனும் நூலிலிருந்து)*

# தொண்டும் அன்பும்

கோடீஸ்வரன் மதனசாந்தி
கரப்பங்காடு - ஓமந்தை

சைவசமயமக்கள் கோயில்களில் தொண்டு செய்ய வேண்டும். தொண்டுகள் சரியை, கிரியை, ஞானம், யோகம் என்று நான்கு வகைப்படும். சரியைத் தொண்டு செய்வதற்கு அப்பர் சுவாமிகள் உதாரணமாவார். இவர் உழவாரத்தால் தொண்டு செய்ததால் உழவாரப்படையாளி என்று ஒரு பெயருண்டு. பல நாயன்மார்கள் தொண்டு செய்து முத்தியடைந்துள்ளார்கள். நாம் எமது சக்திக்கேற்ப தொண்டு செய்ய வேண்டும்.

நாம் அனைவரும் ஒரு மாலையிலுள்ள மலர்களே, மனித சாதியைச் சேர்ந்தவரே என்ற உணர்வுடன் ஒற்றுமையாக கோயில்களில் தொண்டு செய்ய வேண்டும். தொண்டு என்பது ஒரு ஆன்மீக சாதனை. இந்த சாதனையின் போது மனது இதில் முழுமையாக ஈடுபட வேண்டும். ஆத்மாவை உணர்வதற்கு சாதனை செய்வதாக கூறுவார்கள். அன்போடு தொண்டு செய்வதே கடவுளுக்குச் செய்யும் பூஜையாகும். உண்மையான கல்வி ஒரு மாணவனுக்கு அவன் பிற்காலத்தில் வாழ்க்கையின் நல்வழியை கடைப்பிடித்து சமுதாயத்திற்கு உதவி புரிவதாக அமைய வேண்டும். அப்படிப்பட்ட கல்வியை போதிப்பதற்கு ஆலயங்கள் தோறும் அறநெறி வகுப்புக்களை நாம் பெருக்கி வந்தால் எமது நாட்டின் அன்பு என்ற நெடும் பாலத்தால் சகல இனத்தவரையும் அரவணைக்க முடியும்.

ஆதிகாலத்தில் குருசிஷ்ய முறைப்படி கல்வி போதிக்கப்பட்டது. இதனால் குரு பக்தி அதிகரித்தது. இந்த பக்தியினால் தெய்வபக்தியைப் பெற்றனர். எனவே இந்த குருசிஷ்ய முறையை அறநெறி வகுப்புக்களில் நாம் பெறுகிறோம். அறநெறி என்பது அன்புநெறியாகும். அன்பை நாம் மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் பெறலாம். நாம் அன்புடையவர்களாக இருந்தால் நாம் எல்லாம் நிறைந்தவர்களாவோம். "அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும் நண்பெனும் நாடாச் சிறப்பு" அதாவது அன்பு பிறருடன் விருப்பம் உடையவராக வாழும் ஒற்றுமையைத் தரும். அஃது எல்லோரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத்தரும் என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அனைவரும் தொண்டின்மூலம் அன்பைப்பெற்று அன்பின் மூலம் இறைவனை அடைவோமாக.

தன்னைத்தானே தூயவனாக்கிக் கொள்ளவேண்டும். ஒருவன் மற்றொருவனைத் தூயவனாக்கி விட முடியாது.

# வாழ்ந்து பார்க்கலாம் வாருங்கள்!

# கோபப்படலாமா ?

'இந்த உலகில் ஒரு சதவீதம் நல்லதும் ஒரு சதவீதம் கெட்டதும் மீதி 98 சதவீதம் நடுநிலையிலும் உள்ளது' என்று ஒரு ஜெர்மானிய அறிஞர் சொன்னார். அது உண்மையல்ல.

நேரமில்லாத இந்த உலகில் சுயநலமிக்கவர்கள்தாம் அதிகம், நடுநிலையாக இருப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை.

ஆகவே விரோதத்தால் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்களேயானால் உங்களுக்கு உண்மையாகவோ கற்பனையாகவோ விரோதம் பாராட்டப் பல நிகழ்ச்சிகள் உண்டு. அதனால் நீங்கள் ஆத்திரம் அடையக்கூடும்.

இது நல்லதன்று. இதனால் தீமையே அதிகம்.

விரோதத்தையும் கோபத்தையும் அடக்கி வைத்திருந்தாலும் ஆபத்து. வெளியே, ஆத்திரம் தீரக்கத்தினாலும் தீமையே. அது உங்களை உணர்ச்சி பூர்வமாய, உடல், மன, ஆத்மார்த்தமாய் அழித்துவிடுகிறது. இதனால் நஷ்டம் அதிகம்.

உங்களுக்கு மரியாதை குறைகிறது. உங்களை யாரும் மதிப்பதில்லை.

விரோதத்தாலும் ஆத்திரத்தாலும் இரைச்சல் போடுகிறவர்களை நரம்புத்தளர்ச்சி உள்ளவர்கள் என்று ஒதுக்கி விடுகிறார்கள்.

'கோபம் கோழைத்தனம். அது மனப் பாதிப்பையும் பதைபதைப்பையும் காட்டும்' என்கிறார் தத்துவஞானி மார்க்ஸ் அரேலியஸ்.

நீங்கள் அதிகம் உணர்ச்சி வசப்படுகிறீர்களா?

உங்கள் நுண்ணிய உணர்வுகள் வெகு சீக்கிரம் பாதிக்கப்படுகின்றனவா?

தவறாக நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் நீங்கள் துடிக்கிறீர்களா?

சமுகத்தில் நடக்கும் சாதாரண நிகழ்ச்சிகள் உங்கள் மனத்தில் ரணத்தையும், வலியையும் ஏற்படுத்துகின்றனவா?

அதைப் பற்றியே நினைத்துக் கொண்டு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறீர்களா?

உணர்ச்சிகளை இறுக்கிக் கொள்ளுங்கள். உலகில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டு சிறிய விஷயங்களானாலும் அதிக பாதிப்புகளுக்கு உள்ளாகாதீர்கள்.

இரண்டு விதமான முறைகளில் நிச்சயம் பலன் காணலாம்.

(1) பொருட்படுத்தாதீர்கள் – உங்களைப் பற்றி அவதூறாகவோ, மிக மட்டமாகவோ யார் பேசினாலும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதீர்கள். அதைக்கண்டு கொள்ளாமல் விட்டுவிடுங்கள்.

'தனக்குப் பிடிக்காத மனிதர்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பதே கிடையாது' என்பார் ஜெனரல் ஐசன்ஹோவர். ஆனால் அவர் போன்று நீங்கள் இருக்க வேண்டாம். ஆனால் கொதிப்படையாமல் அமைதியாக இருக்கலாம்.

'என்னை யாரும் மட்டமாகப் பேசி இகழ்ச்சி செய்ய முடியாது' என்பார் ஓர் அறிஞர்.

இப்படித் தான் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். எந்த நிகழ்ச்சியோ மனிதரோ உங்களைப் பாதிக்க வேண்டாம்.

அப்படி இருந்தபோதிலும் உங்களால் அவதூறுகளைப் பொறுத்துக் கொள்ள முடியாவிட்டால்.

(2) எண்ணங்களை நிறுத்திவிடுங்கள்– கண்களை ஓய்வாக வைத்திருக்கும் முறைப்படி தேவையற்ற எண்ணங்களை நிறுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.

அமைதியான மனம் இருந்தால் யாரும் எதுவும் உங்களுக்குத் தொல்லைத் தர முடியாது.

அமைதியான மனத்தைக் கெடுக்கும் குணம் கோபத்திற்கு உண்டு.

கடந்த கால நிகழ்ச்சிகள் நடந்து முடிந்துவிட்டன. அவைகளை மாற்ற முடியாது. திரும்பவும் வேறுவிதமாக அமைத்துவிட முடியாது. சென்றவைகளை நினைத்துக் கோபப்பட்டுப் பிரயோஜனம் இல்லை.

மாற்றமுடியாத பழைய நிகழ்ச்சிகளைக் கண்டு வெகுண்டு எழுந்து என்ன பயன்?

ஆகவே,

(1) கோபத்தின் காரணத்திற்கான உங்கள் நிலையை மாற்றிக் கொள்ளுங்கள். என்ன நடந்துவிட்டது என்பதைவிட அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதே முக்கியம்.

(2) மறந்துவிடுங்கள் – 'உங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளைத் தொடர்ந்து நினைத்துக் கொண்டிருக்காவிட்டால் தவறு என்பதை கிடையாது' என்று சொன்னார் சீன அறிஞர் கன்பூஷியஸ்.

கோபப்பட்டுக் கொண்டிருந்தால் நிலைமை மாறாது. மாறாக மோசமாகிவிடும்.

ஆகவே இரண்டுமுறை மாட்டிக்கொண்டு தவிப்பீர்கள்.

தொடர்ந்து ஏற்படும் ஆவேசத்திற்கு முதல்படி கோபம்.

வருத்தம் கோபத்தை உண்டாக்குகிறது.

கோபம் வெறுப்பைக் கிளறுகிறது.

வெறுப்பு விரோதமாக மாறுகிறது.

விரோதம் பகையாகிவிடுகிறது.

ஆகவே வருத்தம் வந்த உடனே உஷார் ஆகிவிட வேண்டும்.

உங்களுக்கு ஏற்பட்டதாக நீங்கள் கருதும் மற்றவர்களின் அலட்சியம், கோபம், தொல்லை போன்றவை அவர்களால் வேண்டுமென்றே உண்டாக்கப்படவில்லை. இந்த அவசர உலகில் அவரவர்கள் தங்கள் வேலையையே முக்கியமாகக் கருதுவதால் சில சமயம் எதிர்பாராத மோதல் ஏற்படுவது கண்கூடு.

உதாரணமாக நெரிசல் மிகுந்த பஸ்களிலும் ரயில்களிலும் உங்கள் காலை மற்றவர்கள் மிதிக்கக்கூடும். இது வேண்டுமென்றே செய்த தவறன்று. இதைப்போன்ற தருணங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கோபம் மற்றவர்களைவிட உங்களைத்தான் அதிகம் பாதிக்கிறது.

ஆகேவ மற்றவர்கள் தெரியாமல் செய்யும் தவறுகளை மறந்துவிடுங்கள்.

அல்லது அவை ஒரு பொருட்டல்ல என்று தள்ளி விடுங்கள்.

அல்லது அவற்றைப் பார்த்துச் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

மறந்துவிடுங்கள்.

உங்களுக்கு ஏற்பட்ட அலட்சியங்களையும், அவதூறுகளையும் நினைத்து நினைத்து ஆண்டுக்கணக்கில் குமுறி என்ன இலாபம்?

அது உங்களுடைய இப்போதைய இன்பத்தைக் கெடுத்துவிடும்.

தென் அமெரிக்காவில் ஒருவகைத் தேள் உண்டு. கோபம் வந்தால் தன்னைத் தானே கொட்டிக்கொண்டு இறந்துவிடும்.

இது கோபத்தின் உச்ச நிலை. உண்மையில் கோபம் விஷம் குடிப்பதற்குச் சமம்.

கோபத்தைப்பற்றி ஆதிகால ரிஷிகள் எச்சரித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்புகள் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக மனிதனுக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன.

தன்னைத்தானே விஷமாக்குவது பற்றி மனோதத்துவ ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

'அறியாமையில் தொடங்கும் சினம் வருத்தத்தில் முடிகிறது' என்பார் கிரேக்க ஞானி பிதாகரஸ். கோபத்தை வெளிப்படுத்தி விடுகிறீர்கள். ஆனால் வருத்தம் உள்மனத்தைக்

குடைந்து கொண்டு குற்ற உணர்ச்சியை வளர்த்துக் கொண்டிருக்கும்.

நாம் அடிக்கும் கோபச் சாட்டையடிகள் நம்மீதே தாக்கி நமது உடலிலும் உள்ளத்திலும் மறைக்கமுடியாத வடுக்களைத் தோற்றுவிக்கும்.

கோபம் கொண்டவனையே கோபம் அதிகம் தாக்குகிறது. யார் மீது கோபம் கொள்கிறோமோ அவருக்கு அவ்வளவு பாதிப்பு ஏற்படுவதில்லை.

ஆனால் சிலசமயம் நமது கோபம் மற்றவர்களையும் பாதிக்கத்தான் செய்கிறது. அவர்களை நமது விரோதியாக்கி அவர்கள் கோபம் நம் மீது பாய்கிறது.

ஆகவே, கோபம் சினத்தை அதிகம் விளைவிக்கிறது. இறுதியில் நமக்கு ஏற்படும் விளைவுகளைக் கவனித்தால் கோபத்தால் சற்று நேரத்திற்கு ஓர் உற்சாகம் ஏற்படுவதைக் காட்டிலும் முடிவு பயங்கரமானது என்பது புரியும்.

கோபத்தினால் மற்றவர்களைக் கிண்டல் செய்யலாம். அது கொடூரமானது.

அமைதியாக இருப்பதனால் அதிக லாபம் உண்டு. நம்மை உலுக்குகிற நேரத்தில் மனத்தை அடக்குவது ரொம்பவும் நல்லது.

கெட்டிக்காரத்தனமாக மற்றவர்களைக் கேலி செய்வது என்பது தொடக்க கட்டத்தில் தமாஷாக இருந்தாலும் மற்றவர்கள் மனதில் காயத்தை ஏற்படுத்தும்.

'ஒரு நிமிஷ நேரம் கோபத்தை அடக்குபவன் ஒரு நாள் முழுவதும் வரும் துன்பத்தைத் தடுக்கலாம்' என்று ஒரு பழமொழி உண்டு. சில துன்பங்கள் வாழ்நாள் முழுதும் உங்களை வதைக்கக் கூடும்.

ஆகவே கோபத்தை நிறுத்த வேண்டும்.

கோபம் என்பது கடலில் ஏற்படும் பயங்கரமான புயல் போன்றது. புயல் நின்ற பிறகும் கடலில் கொந்தளிப்பு தொடர்கிறது. அதுபோல கோபங் கொண்டவர்கள் நிதானத்திற்கு வருவதற்கு நேரம் பிடிக்கும்.

அடிக்கடி கோபப்படுவதால் மனம் வலு இழந்து சிடுசிடுப்பும் ஆற்றாமையும் அதிகரிக்கும்.

போதை மருந்துகளாலும், மது பானங்களாலும் ஒருவித 'உயர்ந்த நிலை' ஏற்படுவதுபோல் கோபத்தாலும் ஆரம்ப கட்டத்தில் 'உயர் நிலை' பிரமை தோன்றும். பிறகு ஏற்படும் மனச் சோர்வு அதிகம் பாதிக்கும்.

கோபமும் மதுபானம் போன்றதே. பழக்கம் காரணமாக எதற்கெடுத்தாலும் சினம் கொண்டால் என்ன லாபம்? முற்றிய நிலையில் கோப தாபத்தைச் சிகிச்சையளித்துக் குணப்படுத்த முடியாது.

கோபத்தின் நிலைகளைப் பார்ப்போம்.

ஒருவன் தான் செய்த தவறை ஏற்காத போது கோபம் கொள்கிறான். குற்ற உணர்வினால் கோபக் கனல் ஜொலிக்கிறது. தவறை ஒப்புக்கொள்வதால் எதிரியை மழுங்கச் செய்து அவன் நம்மைப் புகழாவிட்டாலும் புரிந்து கொள்ளச் செய்யலாம்.

மற்றவர்கள் கவனத்தை ஈர்ப்பதற்காகச் சிலர் சண்டை போடுவதுண்டு. தற்காலத்தில் கத்துவதுதான் நடைமுறை.

கூச்சலும், குழப்பமும் அதிகரிக்கத் தொண்டை கிழியக் கத்திப் போராட்டம் நடத்துவது வாடிக்கையாகிவிட்டது.

ஒருவன் எப்படிப் பேசுகிறான் என்பதை வைத்தே அவன் குணத்தைப் புரிந்து கொள்ளலாம். பேச்சு மணி அடிப்பதற்குச் சமானம். பிசிறு தட்டுவதில் இருந்தே பேசுபவர் எப்படிப் பட்டவர் என்பது புரிந்துவிடும். கத்துகிறவர்களின் வெறுப்பு ஓசையாகிவிடுகிறது.

கோபத்தினால் கத்துகிறவர்கள் தங்கள் சோபையை இழக்கிறார்கள். அவர்களுக்கு அமைதியும் அழகும் அழிந்து போகின்றன.

பகையையும், கோபத்தையும் வருத்தத்தையும் அதிகரித்து ஏற்கனவே உள்ள கஷ்டங்களோடு இந்தச் சிறிய வாழ்க்கையில்

தவிக்க வேண்டாம். பிரச்சினைகளை உண்டாக்கிப் பலன் காண முடியாது.

ஆகவே, அறிஞர்கள் எடுத்துக்காட்டியபடி கோபத்தைத் தவிர்ப்பதற்கான பரிகாரங்களைப் பார்க்கலாம்.

தாமதம் கோபத்திற்குச் சிறந்த மருந்து. 'கோபம் வந்தால் ஒன்று முதல் பத்துவரை எண்ணுங்கள். அதிகமாகக் கோபம் வருகிறதா நூறுவரை தொடர்ந்து எண்ணிக் கொண்டே இருங்கள்' 'உங்கள் கோபத்தில் அக்னிப் பிழம்புகள் கக்க வேண்டாம்' இவ்வாறெல்லாம் அறிஞர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

இருபத்து நான்கு மணி நேரம் கழித்து நடந்ததை நினைத்துப் பார்த்தால் எப்படிப்பட்ட வேறுபட்ட ஆச்சரியமான நோக்கு நமக்குக் கிடைக்கிறது.

இனிமையான சொற்கள் நன்மை பயக்கின்றன. துடிக்கும் வார்த்தைகள் சினத்தைச் சேகரித்து வைக்கின்றன.

இனிய உளவாக இன்னாத கூறல் கனி இருப்பக் காய் கவர்ந்தற்று – குறள்

மற்ற உணர்ச்சிகளைப் போலவே கோபத்தையும் கட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

நமது உணர்வுகளைக் கட்டுப்படுத்தி முதலில் கோபத்தைக் குறைத்துக் கொண்டே அடியோடு ஒழித்துவிடமுடியும்.

மற்றவர்களின் கோபத்தை நமது புன்முறுவலால் உடைத்து விடமுடியும். பிறகு அதை மன்னித்து மறக்கக் கற்றுக்கொள்ளலாம்.

எதிரியை வெல்வதைவிட அவனைப் புரிந்து கொள்வதே மேல். எதிரியைத் தோற்கச் செய்தால் அவன் மீண்டும் எழுந்து தொல்லை கொடுக்கக்கூடும். ஆனால் அவனோடு சமாதானம் செய்து கொண்டால் அவன் தலை எடுக்கவே மாட்டான்.

உங்கள் எல்லா வேலைகளையும் மற்றவர்கள் செய்யச் சொல்லிவிடலாம். ஆனால் மன்னிப்பு என்பதை நீங்களே முடிவு செய்ய முடியும்.

உங்களைப் பழித்தால் அதற்கு நீங்களே பதில் சொல்ல முடியும். முதலில் வசைச் சொல்லை கண்டுகொள்ளாதீர்கள். முடியாவிட்டால் அதைச் சிரித்து மழுப்பிவிடுங்கள். அப்படியும் முடியாவிட்டால் அந்தப் பழிச்சொல் தரும் படிப்பினை என்ன என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள்.

மற்றவர்கள் சொல்லக் கூச்சப்படும் நமது தவறுகளை ஏச்சும் பழிச்சொல்லும் காட்டிக்கொடுத்துவிடும். எதிரிகள் தான் உங்கள் தவறுகளை நன்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவார்கள். அவைகளை உணர்ந்து நடந்து கொள்ளுங்கள்.

உங்கள் எதிரிகளை நேசிக்க முடியாவிட்டாலும் வெறுக்காதீர்கள்.

பகை உணர்ச்சி மிகுந்தவர்கள் உங்களை உரசிக் கோபிக்க வைத்தாலும் அமைதியாக இருங்கள்.

இதனால் கனிவு, கட்டுப்பாடு ஏற்படுவதோடு மனம் செம்மைப்படும்.

அது அமைதிப் பேரின்பத்தைக் கொடுக்கும்.

அதுசரி! இன்னமும் உங்களுக்கு கோபம் வருகிறதா ?

## ஆரோக்கியம்

*எல்லா நோய்களும் மனத்திலேதான் பிறக்கின்றன. உடலில் மட்டும் வியாதி தோன்றுவதில்லை. முதலில் மனத்தில் தோன்றுகிறது. பின்னர் உடலுக்கு மாற்றப்படுகிறது. மனத்தில் உருவ அமைப்பே உடல். நம் உடலும் பொறிகளும் நம் மனத்தின் விசிவாக்கங்களே. மனம் முழுமையான நிலையில் இருந்தால், நம் உடல் ஆரோக்கியத்துடன் இருக்கும்.*

*-சுவாமி சிவானந்தர்*

# இறை தத்துவம்

சுவாமி சிவானந்த ஸரஸ்வதி

கடவுள் ஸ்வயம்பூ; தாமாக உண்டானவர்; எவராலும் தோற்றுவிக்கப்படாதவர். அவர் 'தான்தோன்றி' ஸ்வயம் ஜோதி; தாமே ஒளிர்பவர். தம் ஒளியிலேயே காட்சி தருபவர். நிரூபணம் என்னும் செயல்முறைக்கே ஆதாரமாகக் கடவுள் இருப்பதால் அவருக்கு நிரூபணம் தேவையில்லை. அவர் தம்மைத் தாமே நிரூபித்துக்கொண்ட ஸ்வாயம் சித்தர். எல்லாம் நிறைந்த பரிபூரணர் அவர். இப்பிரபஞ்சமே அவருள் அடக்கம். அவர் தாமாகவே அனைத்தையும் அறிபவர்.

நாம் நமது பூதவிடலால் அவரை உணரமுடியாது. ஊனக்கண்களால் காண இலயாது. அவ்வளாவு சூக்ஷ்மமானவர் அவர். உணரவோ, காணவோ முடியவில்லை என்பதால் அவர் இல்லை என்றே ஆகிவிடுமா? ஒரு நாளும் ஆகாது.

இரவில் சூரியன் தெரிவதில்லை. இதைக் கொண்டு சூரியன் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? நீறு பூத்த நெருப்பு கண்களுக்குத் தெரிவதில்லை. சாம்பலை நீக்கினால் அது சுடர் விடுகிறது. அதுபோல் அகங்காரம் என்னும் அஞ்ஞான்தை நீக்கினால் பிரம்மம் சுடர்விடுவதைக் காணலாம்.

பாலில் வெண்ணெயைக் கடைந்தெடுத்தே காண்முடியும். அதுபோலத் தியானத்தின;மூலம் உள்ளத்தைக் கடைந்து ஆத்ம ஸ்வரூபத்தைக் காணலாம்.

கண்ணுக்குத் தெரியாத பிராணனின் இயக்கத்தினால்தான் சரீரம் இயங்குகிறது. அந்தப் பிராணன் புலனுக்கு அப்பாற்பட்ட பொருள். அது படைத்த மனமும் பார்க்கமுடியாத ஒன்றுதான். ஆனால் அதன்மூலமாக எண்ணுதல், தீர்மானித்தல், உணலுதல், நினைவு கூர்தல் அனைத்தும் நிகழ்கின்றன.

வாயுவைப் பார்க்கமுடியாது. ஆனால் காற்று இருக்கிறது என்பது உண்மை.

அடிபட்ட மனிதனால் உடலின் வலியைக் காண்முடியாது; வலியை உணரமுடியும்; அனுபவபூர்வமாகக் காணமுடியும்.

அதுபோலக் கடவுளை உணரமுடியுமே தவிர-அநுபவிக்க முடியுமே தவிரப் பிறருக்குக் காட்ட முடியாது.

முழுமையான இதயத்தூய்மை, ஆழ்ந்த மன ஒருமைப்பாடு ஆகியவற்றின்மூலம், உள்ளுணர்வு கைவரப்பெறுமானால் மட்டுமே கடவுளை உணரமுடியும்.

எதைச் செய்தாலும் முழு ஆற்றலுடன் செய்ய வேண்டும்.

# நாம் உணரும் உணர்வு

சுவாமி சின்மயானந்தா


இன்று நாட்டில் எவ்வளவோ துறைகளில் முக்கியமான நோக்கங்கள் மறக்கடிக்கப்பட்டுவிட்டன. மருத்துவமனையில் டாக்டர் சரியாக வைத்தியம் செய்யவதில்லை. கல்லூரிகளில் சரியாகப் பாடம் நடப்பதில்லை. அரசாங்க அலுவலகங்களில் சரியாகப் பணிகள் செய்யப்படுவதில்லை. நல்ல நோக்கங்கள் பாிபோவதும், அந்த சாக்கில் தகாத நோக்கில் பணம் சம்பாதிப்பதும் இயல்பாகிவிட்டது. இது நமது ஒழுக்கக் குறைவினால் ஏற்பட்ட பலவீனம். இந்த நச்சுக் காற்று ஆலயங்களையும் விட்டுவிடவில்லை அங்கேயும் புனிதமும், உயர் நோக்கங்களும் ஓரளவு குறைந்துள்ளன. கடவுளின் பெயராலும் கூட தீயசெயல்கள் நடைபெறுகின்றன.

ஓரிடமும் ஆலயமும் சக்தி வாய்ந்து பெருமைப்படுவது அங்கே செல்லும் மகான்களால்தான். இராமகிருஷ்ணர் இருந்ததால் தட்சிணேஸ்வரம் பெருமைபெற்றது. இராமதாஸர் இறந்ததால் பத்ராசலம் பெருமைபெற்றது. எண்ணற்ற புனித மகான்களின் காலடி பட்டதால் காசி பெரும் ஷேத்திரம் என்ற மகிமை பெற்றது. அப்படிப்பட்டவர்கள் இருந்தால் இன்றும் அந்த பெருமை தொடர்ந்திருக்கும். ஆனால் அத்தகைய மகான்கள் வாழ்ந்ததாலும் வந்து தரிசித்ததாலும் இன்னும் அந்த மண்ணை நல்ல நோக்கத்துடன் செல்லும் பக்தர்கள் மிதிக்கும்போது மனதில் தூய்மை துளிர்விடுகின்றது. அங்கே ததும்பும் அமைதியும் நிறைவும் நம்முடைய உள்ளத்திற்கு அளவிலாத அமைதியைத் தருகின்றது. இது நமக்கு பல நூறு ஆண்டுகளாகக் கிடைத்த பாரம்பரியம் ஆகும்.

அந்த மதிப்பும் அதனால் நன்மை பெறுவதும் நம்முடைய மனதில் தான் இருக்கிறது. நாம் உணரும் உணர்வில் தான் இருக்கிறது.

பண்படாத மனிதனிடத்தே வேற்றுமை பாராட்டும் இயல்பு இருக்கிறது.

# சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம்





சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தா பணிப்பாளர் எஸ். தில்லைநடராஜா, பதில் அதிபர் திருமதி கமலா ஞானதாஸ், முன்னாள் அதிபர் திருமதி தட்சணாமூர்த்தி ஆகியோரும், சான்றிதழ் பெற்ற மாணவர்களின் ஒரு பகுதியினரும் படத்திற் காணப்படுகின்றனர்.

# O.S.S.

To 70 Mr. K.Nadesan
"Theniyagam"
Polikandy
Valvettithurai

........................................................................

........................................................................

கோபுரம்

இந்துசமய கலாசார அலுவல்கள்

திணைக்கள தகவல் வெளியீடு

NEWS MAGAZINE OF THE DEPARTMENT OF

HINDU RELIGIOUS & CULTURAL AFFAIRS

Printed by : Maric Printers 173, Jampettah Street, Col-13. Tel : 432452